நம் வழி வேளாண்மை

பருவம் 24 ஜனவரி – மார்ச் 2015 இதழ் 4

மக்காச்சோளத்தில் தண்டு புழுவை கட்டுப்படுத்த கலப்புபயிர் சாகுபிடி



இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம்வழி வேளாண்மை

பருவம் 24 ஜனவரி – மார்ச் 2015 இதழ் 4

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி

Prof. Anil Gupta,
Honey Bee,
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

தீர்ப்பில் ஒரு புதிய உத்தி

துகாராம் என்பவர் மஹராஷ்ரா மாநிலத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து வந்த இறை பக்தர். ஒரு நாள் பக்கத்துப் பக்கத்து வீட்டில் வசித்த பெண்களுக்குள் பலத்த சண்டை வந்து விட்டது. அவர்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே இடத்தில் எரு வறட்டி தட்டினார்கள். உலர்ந்த பின் அவை ஒன்றோடொன்று கலந்து விட்டன. யாருடையது எவ்வளவு என்று தெரிந்து கொள்ள முடியாமல் சண்டை வந்து விட்டது.

துகாராம் அந்த வழியாகப் போனார். அவர் விஷயத்தைக் கேட்ட பின்பு எரு வறட்டிகளைப் பிரித்துத் தருவதாகச் சொன்னார். எல்லா எரு வறட்டிகளும் அவர் முன் குவிக்கப்பட்டன. அவர் ஒவ்வொன்றாகக் காதில் வைத்துப் பார்த்து இரண்டாகப் பிரித்தார். பிறகு, ''அம்மா இருவரில் யார் வேலை செய்யும் போது இறைவன் நாமத்தை கூறினீர்கள்? என்று கேட்டார்.

நாமம் சொல்லிக் கொண்டே எரு வறட்டி தட்டிய பெண் முன்னால் வந்தாள். ''அம்மா இடப்பக்கம் உள்ள குவியல் உன்னுடையது. வலப்பக்கம் உள்ளது மற்றவளது''என்றார். வேடிக்கை பார்க்கக் கூடியிருந்தோர், ''சுவாமி, இது எப்படி சாத்தியம் ?'' என்றனர்.

''நாம் இறைவனின் நாமம் செல்லும் போது நாம அலைகள் சுற்றுப்புறம் முழுவதும் பரவும். நாம அதிர்வுகள் இந்த எரு வறட்டிகளில் உள்ளன. அதைக் கேட்டு அவற்றைப் பிரிக்க முடிந்தது'' என்றார் துகாராம்.

நல்ல எண்ணம் கொண்டவர்கள் நல்ல அதிர்வு சூழல்களினாலும் கேடு நினைப்பவர்கள் கெட்ட அதிர்வுகளினாலும் பாதிக்கப்படுவார்கள். இத்தகைய அதிர்வுகளை சிலருக்கு கிரகிக்கும் ஆற்றல் உண்டு. துக்காராம் இந்த தத்துவத்தின் மூலம் கூறிய தீர்ப்பு உத்தம தீர்ப்பாகும். இதனை அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள். இந்த தீர்ப்பு ஒரு புதிய உத்தி என்றால் அது மிகையாகாது.

நன்றி –ஆன்மீகக் கதைகள்

கிராம வாழ்வாதாரமும் மேய்ச்சல் நிலமும்

இந்தியாவில் கிராமப்புற மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு , நெசவு போன்ற தொழில் மூலம் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். நிலம் இல்லாத தொழிளாலர்களும் கால்நடை வளர்ப்பு மூலம் ஜீவனம் நடத்தி வருகின்றனர். இவர்கள் கால்நடைகளை மேய்ப்பதற்கு பொது இடங்களைத்தான் நம்பியுள்ளனர். தற்சமயம் மேய்ச்சல் நிலம் அல்லது புறம்போக்கு நிலம் நாளுக்கு நாள் பல்வேறு காரணங்களினால் குறைந்து கொண்டு வருவது இத்தொழிலையே கேள்விக் குறியாக ஆக்கிவிடும் போல் தெரிகிறது . தமிழ் நாட்டில் "சேவா" தொண்டு நிறுவனம் மூலம் பாரம்பரிய கால்நடை வளர்ப்போருடன் தொடர்பு கொண்டு பல ஆண்டுகள் பணி செய்தோம். இச்சமயத்தில் நாங்கள் அறிந்த சில மேய்ச்சல் சம்மந்தப்பட்ட விஷயங்கள், யோசனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

ஊர் பொது நிலங்கள்

கிராமங்களில் காணப்படும் பொது நிலங்கள் அல்லது மேய்ச்சல் நிலங்கள் தனியார் கையில் ஆக்கிரமிப்படுதல் ,அரசினால் பிற வளர்ச்சி பணிகளுக்கு கையகப்படுத்துதல் போன்ற காரணங்களினால் மேய்ச்சல் நிலம் குறைந்து கொண்டு வருகிறது.

நாகப்பட்டிணம் மாவட்டத்தில் தலைஞாயிறு வட்டராத்தில் உம்பளச்சேரி கிராமத்தில் 107 ஏக்கர் மேய்ச்சல் நிலம் கிராமத்திலுள்ள சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டு சுமார் 50 வருடங்களாகிறது . இவ்வூரிலுள்ள உம்பளச்சேரி மாடு வளர்ப்போர் சங்கம் வேதாரண்யத்தில் வட்டாச்சியர் ஆலுவலகம் முன் 2003 ல் ஒரு நாள் உண்ணாவிரத போராட்டம் நடத்தி புறம்போக்கு நிலத்தை மீட்டனர். ஆனால் வட்டாச்சியர் மூலம் மேய்ச்சல் நிலத்திற்கு நான்கு மால் போடப்பட்டு சர்வே செய்யப்பட்டு இன்னும் கல் ஊன்றி தரப்பட வில்லை. இதே போன்ற நிலைமை தமிழகத்தில் பல கிராமங்களில் காணப்படுகின்றன. இதற்கு சம்மந்தப்பட்ட துறையும் மக்கள் குழுக்களும் ஆக்கிரமிப்பு நிலங்களை மீட்பதற்கு அரசு ஊக்கப்படுத்த வேண்டும்.

பொது இடங்களில் காணப்படும் சீமைகருவேல் , குளங்களில் காணப்படும் நெய்வேலி காட்டாமணக்கு போன்ற சுற்று சூழலுக்கு பாதிப்பு தரும் தாவரங்களை அப்புறப்படுத்தி உதியன் , வேம்பு , சுபாபுல், வாகை, கருவேல் , வன்னி , வெல்வேள், தடாசு போன்ற தீவன மரங்களை உண்டாக்க வேண்டும். மழை காலங்களில் பொது இடங்களை 3–4 பாகங்களாக பிரித்து சில பகுதிகளில் கொளுக்கட்டை புல் போன்ற மானாவரி புல் வகைகளை விதைத்து 2 வருடங்கள் பாதுகாத்து பின்னர் மேய்ச்சலுக்கு திறந்து விடலாம். அடுத்த 2 வருடங்களில் பிற பகுதிகளில் விதைத்து மூட வேண்டும். இது போன்ற பணிகளை மேற்கொள்ள உள்ளூர் சுய உதவி குழுக்களுக்கு முழு அதிகாரமும் நிதியும் தர அரசு தயங்கக் கூடாது.

தனியார் நிலங்கள்

நிலம் உள்ள விவசாயிகள் தங்கள் சொந்த இடங்களில் தீவன புல் வளர்க்க அரசு ஊக்குவித்து வருகிறது. ஆனால் பாரம்பரியமாக மேய்ச்சல் நிலமாக பாதுகாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வரும் மானாவரி நிலங்களை அரசு இன்னும் புரிந்து கொள்ள வில்லை. இதற்கு ஓர் உதாரணம் "கொறங்காடு மேய்ச்சல் நிலம்". திருப்பூர், கரூர் பகுதியில் சுமார் 4000 சதுரகிலோ மீட்டர் பரப்பளவில் மானாவரி பூமியில் கொறங்காடு காணப்படுகிறது. கொறங்காடு நிலங்கள் பட்டா நிலங்களில்தான் உள்ளன. கொறங்காட்டு மேய்ச்சல் நிலத்தில் முக்கிய பயிராக கொளுக்கட்டை புல்லும், பயறுவகை தாவரமான நரிப்பயறு, கொள்ளு பயிர்களும், வெள்வேலா மரங்களும் வளர்க்கப்படுகின்றன. உயிர்வேலியாக முள்ளு கிளுவை தாவரம் உண்டாக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. பயறு வகைகள் முதிர்ந்ததும் அல்லது சில இடங்களில் அறுவடை செய்த மேய்ச்சலுக்கு திறந்து விடப்படும். உழவர்களுக்கு பல்வேறு இலவச திட்டங்களை நமது தமிழக அரசு உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இது வரை கொறங்காட்டு நிலத்தை பராமரிக்கவும், உயிர்வேலியை பலப்படுத்தவும் வெள்வேல் மரக்கன்றுகள் நடவும், கொறங்காட்டில் கொளுக்கட்டை புல் விதைக்கவும் மானியம் தரப்படவில்லை. மாறாக தோட்டக்கால் பகுதியில் சீமைத்தீவனப்புல் போட மட்டும் அரசு உதவி செய்கின்றது. வங்கிகளில் கொறங்காட்டிற்கு கடன் வசதி தரவும், மானாவரி / தரிசு நில மேம்பாடு, நீர்வள மேலாண்மை (watershed) திட்டங்களிலும் சேர்க்கப்பட்டு மானியத்தொகை வழங்க அரசும், நபார்டு போன்ற நிறுவனங்களும் இது வரை முன் வரவில்லை.

இந்நிலங்களைப் பாதுகாக்க 2 கருத்தரங்குகள் மே 2004 (29, 30 நாட்களிலும்) டிசம்பர் 2005 (10 வது நாளிலும்) தாராபுரம் வட்டாரம் நல்லாம்பாளையம் கிராமத்தில் மதுரை "சேவா" தொண்டு நிறுவனம் மூலம் நடைபெற்றன. இக்கூட்டத்தில் கொறங்காடு நிலம் சாகுபடியாளர்களுக்கு மானியத்தொகை, கடன் வசதி வழங்குதல், கால்நடைகளுக்கு குடி நீர் வசதி ஏற்படுத்தி

கொடுத்தல், நாட்டு கால்நடை இனங்கள் (காங்கயம், தர்பார்க்கர், மேச்சேரி செம்மறி ஆடு வளர்ப்பு) பராமரித்தல், பல்லுயிர்பன்மயம் மற்றும் கலாச்சார சின்னமாக அறிவித்தல் (Heritage Site for conservation) போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு புத்தகவடிவில் அரசு அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டன. இதுவரை எந்த நடவடிக்கையும் கால்நடை துறை எடுக்கவில்லை.

வனங்கள்

தமிழ்நாட்டில் 1997 ம் ஆண்டிலிருந்து கூட்டு வன நிர்வாகத் திட்டம் (TAP) செயல்படுகின்றது. இதனால் ஆங்காங்கே மலை அடிவாரங்களிலுள்ள கிராமங்களில் வனக் குழு ஏற்படுத்தப்பட்டு மலையில் மேய்க்கப்படும் பாரம்பரிய மேய்ச்சல் தடைவிதிக்கப்பட்டது. இதன்பின்னர் சேவா , கால்நடை வளர்ப்போர் சங்கங்களின் முறையீட்டின் பேரில் மேய்ச்சல் கொள்கை ஒன்றை வனத்துறை உருவாக்கி உள்ளது.

வனங்களில் கால்நடை மேய்ச்சல் கொள்கை

தமிழ்நாடு வனத்துறை, சென்னை சுற்றறிக்கை எண் 20/2007, பார்வை எண் ஜே 3 / 47422/2006 படி ஒரு புதிய மேய்ச்சல் கொள்கையை தமிழ்நாடு வனத்துறை உருவாக்கியுள்ளது. இதிலுள்ள அம்சங்கள் பின்வருமாறு

1. வனங்களில் மறு உற்பத்தி மேற்கொள்ளப்படும்:

(5 ஆண்டுகளுக்கும் மேலான) பகுதிகள் உட்பட மேய்ச்சல் அனுமதிக்கப்படும் பிற வனப்பகுதிகளில் மாவட்ட வன அலுவலர் தணிக்கை மேற்கொண்ட பின்னர் வன உயிரின இருப்பினைக் கருத்தில் கொண்டு அப்பகுதிகளில் மேய்ச்சலை அனுமதிக்க பரிசீலினை மேற்கொள்ளலாம். மீண்டும், வனப்பகுதிகளில் உள்ளூர் கால்நடைகள் மேய்ச்சலுக்கு அப்பகுதிகளில் உள்ள கிராம வனக்குழு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அனுமதி வழங்க பரிசீலிக்கலாம்.

2. உள்ளூர் கால்நடைகளின் தீவன இருப்பு மற்றும் அப்பகுதிகளின் தாங்கு திறனை கருத்தில் கொண்டு அப்பகுதிகளில் மேய்ச்சலை அனுமதிக்க பரிசீலனை மேற்கொள்ளலாம். மீண்டும், வனப்பகுதிகளில் உள்ளூர் கால்நடைகள் மேய்ச்சலுக்கு அப்பகுதிகளில் உள்ள கிராம வனக்குழு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அனுமதி வழங்க பரிசீலிக்கலாம்.

3. உள்ளூர் கால்நடைகளின் தீவன இருப்பு மற்றும் அப்பகுதிகளின் தாங்குதிறனை கருத்தில் கொண்டு கிராம வனக்குழுவின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி மலைமாடு இனவகை கால்நடைகளின் மேய்ச்சலை அனுமதிக்கலாம்.

4. கால்நடை மேய்ப்போர் / உரிமையாளர்களின் கால்நடை மேய்ச்சலுக்கு வனப்பகுதிகளில் அனுமதி வழங்குவதற்கு முன் வனப்பாதுகாவலர்கள் / மாவட்ட வன அலுவலர்கள் மேற்கூறிய விவரங்களின் அடிப்படையில் வழங்கப்பட்ட பல்வேறு அரசாணைகள் மற்றும் அறிவுரைகளை தவறாமல் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார். தலைமை வனப்பாதுகாவலர்கள் / வனப்பாதுகாவலர்கள் இக்கடிதத்தினை பெற்றதற்கான ஒப்புதலை அளிப்பதுடன் , தமது கட்டுப்பாட்டிலுள்ள மாவட்ட வன அலுவலர்கள் / வன உயிரினக் காப்பாளர்களுக்கு அனுப்பி அவர்களின் ஒப்புதலைப் பெற்று தங்களது அலுவலகங்களில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(திரு.சி.கே. ஸ்ரீதரன், முதன்மை தலைமை வன பாதுகாவலர்)

புதிய வன மேய்ச்சல் கொள்கை உருவாக்கு முன்னர் மக்களுடன் இணைந்து முடிவெடுத்தல்

தமிழ்நாடு வனத்துறையில் மேய்ச்சலுக்கான கொள்கை கொண்டு வரப்பட்டது நல்ல முயற்சி. இந்த முயற்சியை பாராட்டுகின்றோம். இந்த சுற்றறிக்கையின் படி கிராம வனக்குழுவிற்கும், மாவட்ட வன அதிகாரிக்கும் முடிவெடுக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் கிராம வனக்குழுக்கள் இன்னும் சுயமாக செயல்படவும், ஜனநாயக ரீதியில் முடிவெடுக்கவும், கூட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் கூடுவதும் முறைப்படுத்தப்பட வேண்டும். தற்சமயம் கிராம வன குழுக்களை அதனுடைய செயலாளராக இருக்கும் வன சரகர் முடிவின்படி தான் கூட்டம் கூட்ட முடியும். வனச்சரகர் மாதந்தோறும் அல்லது குறிப்பிட்ட தினத்தில் கூட்டம் கூட்டுவது என்பது அரிதாக உள்ளது. இதனால் பெரும்பாலும் வனச்சரகருடைய முடிவே கிராம வனக்குழுவின் முடிவு என்ற நிலை காணப்படுகின்றது.

வனத்தின் தாங்குதிறன் மதிப்பீடு செய்தல்

மேலும் வனச்சரகர் மாவட்ட வன அதிகாரிகள் மக்கள் பங்கேற்புடன் வனத்திற்குள் சென்று நடப்பட்ட கன்றுகள், வளர்ச்சி, கிராமத்தின் தேவைகள், பாரம்பரியமாக மலையில் மேய்த்தவர்களுடைய எண்ணிக்கை, கால்நடைகளின் எண்ணிக்கை , மேய்ச்சல் பகுதி விஸ்தீரனம், கால்நடைகளின் பருவகால இடப்பெயர்வு, சுழற்சி முறை மேய்ச்சல் போன்ற விவரங்களுடன் மக்களுடன் மற்றும் மேய்ப்பவர்களுடன் சேர்ந்து கூட்டம் போட்டு முடிவெடுக்க வேண்டும். இதனால் வனமும் நன்றாக இருக்கும், மக்களும் வனத்தின் மூலம் பயனும் பெறுவர். ஓரிடத்தில் மரக்கன்றுகள் நடும் சமயம் அல்லது வனம் மூடப்படும் சமயம் வேரிடத்தில் மேய்ப்பதற்கும், பழைய பாதையில் நடந்து செல்வதற்கு எந்த இடையூறுகளும் இல்லாமல் எங்ஙனம் அனைவரின் சம்மதத்துடன் மேய்ச்சல் முறையை கொண்டு வருவது என்பது கலந்து ஆலோசிக்கப்பட வேண்டும். மரங்கள் நடும் சமயம் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் கால்நடைகளுக்கு ஏற்ற தீவன மரங்கள், புற்கள் உண்டாக்குவதும் செயல்படுத்த வேண்டும். புதிய மேய்ச்சல் கொள்கை உருவாக்குவதற்கு வனத்துறை மட்டும் தன்னிச்சையாக ஒரு கொள்கையை உருவாக்காமல் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள் குறிப்பாக கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள், வருவாய் துறை அதிகாரிகள், கால்நடை மற்றும் வேளாண்மை பல்கலைக் கழக வல்லுநர்கள், தொண்டு நிறுவனங்கள், கிடைக்காரர்களுடைய பிரநிதிகள் இவர்களுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

சுழற்சிமுறை மேய்ச்சல் முறை

பின்னர் கிராம அளவில் ஒவ்வொரு கிராமம் அல்லது பகுதிக்கேற்றவாறு மேய்ச்சல் முறை செயல் திட்டம் தீட்டப்பட வேண்டும். உதாரணமாக மலையினை / வனத்தை 3 பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதியிலும் 5 வருடம் சுழற்சி முறையில் மேய்க்கப்பட்டு வந்தால் மற்ற பகுதியில் 10 வருடங்கள் வரை வளம் கூட (regeneration of forests allowed for 10 years without any grazing) ஒரு கட்டுக்கோப்பு சுழற்சி முறையை உருவாக்கலாம். இதனால் வனத்தில் மேய்ப்பவர்களுக்கும் உத்தரவாதம் கிடைக்கிறது. வனத்தில் கால்நடைகள் மேயும் சமயம் சாணமும், கோமியமும் மண் வளத்தை அதிகரிக்கும். வனமும் 10 வருடங்களில் புத்துயிர் பெற்று வளம் பெறும். இப்படியில்லாமல் வனத்தை முற்றிலும் மூடுவது பாரம்பரிய மேய்ச்சல் உரிமையை மறுப்பதாகும். அதாவது வனத்தை முற்றிலும் மூடுவது தற்போது உள்ள ஆதிவாசிகள், வனத்தை நம்பி வாழ்வோரின் வன உரிமை சட்டம் 2006(The Scheduled Tribes and Other Forest dwellers Forest Act 2006) க்கு புறம்பானதாகும்.

வனவிலங்குகளையும் நாட்டு பிராணிகளையும் பாரம்பரிய முறையில் பாதுகாத்தல்

சரணாலயங்களில் உள்ள காட்டு மிருகங்களுக்கு நாட்டு கால்நடைகளிலிருந்து நோய் பரவும் என்பதற்கு விஞ்ஞான பூர்வமான ஆதாரமில்லை. இருப்பினும் முறையாக தடுப்பூசி போட்டு கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பும் முறையை பின்பற்றலாம். சரணாலயம், தேசிய பூங்கா போன்ற இடங்களில் பாரம்பரிய மேய்ச்சலை தடை செய்வதால் ஏற்பட்ட பாதகங்கள் பரத்பூர் பறவைகள் சரணாலயத்தில் எருமை மேயச்சலை தடை செய்யப்பட்டதால் புற்கள் பெருகி பறவைகள் வருவது நின்றுவிட்டன ஓரிஸ்ஸாவில் சிலிகா ஏரியில் எருமை மேய்ச்சல் தடைசெய்யப்பட்டதால் மீன்வளம் குறைந்துவிட்டது. இதனால் எருமை மேய்ச்சல் மீண்டும் அனுமதிக்கப்பட்டது. கிர்காடுகளில் கால்நடைகளை நம்பி வாழ்ந்த புலி, சிங்கங்கள் தற்பொழுது கால்நடை மேய்ச்சல் தடை செய்யப்பட்டதால் ஊருக்குள் வந்து நாசம் செய்கிறது. சில பகுதிகளில் கால்நடைகள் பருவத்திற்கு ஏற்றவாறு ஓட்டிச்சென்று மேய்ப்பர். மற்ற காலங்களில் வேறு இடங்களுக்கு ஓட்டிச் செல்வர். மதுரை , விருதுநகர் , தேனீ, ஈரோடு (பர்கூர்) மாவட்டங்களில் மலையில் கிடை அமர்த்தும் சமயம் அவர்களுக்குரிய பட்டி பாசு முறை, மலையில் தங்கி வாழும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள லிங்காயத் சமுகத்தினர் தங்களிடம் உள்ள பர்கூர் பட்டி மாடுகளை பாதுகாக்கவும் இரவில் வனத்தில் பட்டி அமைக்க கர்நாடகா மாநிலத்தை தான் நம்பியுள்ளார்கள். இந்த நிலை மாற தமிழ் நாடு வனத்துறை இந்த மக்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

உன்னிச்செடி, தைலமரம், சீமைக்கருவேல் போன்ற சூழல் பாதிப்பு தாவரங்களை அழித்தல்

ஈரோடு பர்கூர் வனத்தில் லண்டானா (Lantana) எனக் கூறப்படும் உன்னிச்செடி, யூகலிப்டஸ் எனப்படும் தைலமரம் (Eucalyptus), சீமைக்கருவேல் (Prosopis juliflora), நீலகிரி மலைகளில் மரக்கன்றுகளை சுற்றி பாதுகாப்புக்காக நடப்படும் பன்றிமுள் (ஆரஞ்சு நிறத்தில் பூ பூக்கும்) போன்றவை பரவி வருவதை பஞ்சாயத்து

மூலம் நூறு நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் அழிப்பதற்கு வனத்துறை இன்னும் முன் வர வில்லை. ஆனால் இது போன்ற பணிகள் கர்நாடகா மாநிலத்தில் கடைபிடிக்கப்படுகிறது.

புதிய மேய்ச்சல் கொள்கை பற்றி விவாதித்தல்

மதுரையில் சேவா மூலம் 22–2–2008 அன்று பாரம்பரிய கால்நடை இனங்கள், வனவளம், பல்லுயிர் பரவல் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. இதில் புதிய மேய்ச்சல் கொள்கை உருவாக்கவும் இதன் மூலம் பாரம்பரிய கால்நடை வளர்ப்போருக்கு மேய்ச்சல் உரிமை கொடுக்கவும், வனத்தை பாதுகாக்கவும் கலந்தாலோசிக்கப்பட்டது. இதில் போடப்பட்ட தீர்மானங்களை செயல்படுத்த தமிழ்நாடு அரசும் வனத்துறையும் முன் வரவேண்டும்.

– பெ. விவேகானந்தன், சேவா

செருவயல் ராமனுக்கு விருது

கேரளாவில் வயநாடு பகுதியில் பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாக்கும் செருவயல் இராமனுக்கு 25.4.2015 அன்று விருது வழங்கப்பட்டது. செந்நெல்லு, கன்னி, செட்டுவெளியன், மரத்தோண்டி, செம்பகம், செந்தடி, வெள்ளசெந்தடி, முண்டகன், செந்நெல் தொண்டி, சோமளா, வெரும்பலா, அடுக்கன், கொத்தநாடான், கண்டகளவா, கயாமா, உருனிகயாமா, ஜீரகசாலா, பால்தொண்டி, ஓனமொட்டன், ஓனசன்னா, கோட்டு வெளியன், பால்தொண்டி, வெள்ளா, செரியகுருவா, தவலகண்ணன், கள்ளடியாரயன், ஒக்கபுஞ்சா, தொன்னுரம் தொண்டி, தொன்னுரம்புஞ்சா, நவரா, புன்னாடன் தொண்டி, கருத்தன், குரும்பலி, பால்வெளியன் போன்ற 33 இரகங்களை பாதுகாத்து வருகிறார். 31 இரகங்கள் 5 சென்ட் நிலத்திலும், ஜீரகசாலா 25 சென்ட் நிலத்திலும், மரதொண்டி 3 ஏக்கரிலும் பயிரிடப்படுகிறது. மரதொண்டி நெல்ரகம் நல்ல விலைக்கு போகிறது. 3 மாதத்திலிருந்து 8 மாதங்கள் வரை வயதுடைய இரகங்கள் இவரிடம் உள்ளது. கள்ளடியாரயன், தவளக்கண்ணன், புன்னதன்தொண்டி, ஒனமொட்டான் போன்றன வறட்சி தாங்கி வளரும். எல்லா இரகங்களையும் இயற்கை வழியில் இரசாயன உரம், மருந்து உபயோகிக்காமல் பாதுகாத்து வருகிறார்.

இராமன், செருவயல்
கம்மனா அஞ்சல்
மனந்தவாடி
வையநாடு,
செல் : 9947796775, 9947222180

இந்திய பசு வளர்த்து செழுமையான பிரேசில் நாடு

(71 லிட்டர் பால் தரும் பிரேசில் நாட்டு **"கிர்"** பசு படம்)

பிரேசில் நாடானது 500 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட இளநாடு. இங்கு ஆதி காலத்தில் பசுக்கள் இல்லை. 15 வது நூற்றாண்டில் (1530ல்) இந்தியாவிலிருந்து பசுக்கள் இங்கு கொண்டு வரப்பட்டன. இந்நாட்டில் பசுக்கள் கால் வைத்ததும் தரித்திரம் விலகி யோகம் வந்ததாக நம்புகிறோம். இங்கு

பசுக்களை பாலுக்காகவும், இறைச்சிக்காகவும் வளர்க்கிறோம். பிரேசில் சீதோஷ்ண நிலை அதிகப்படியாக 50 சென்டிகிரேட் வெப்பத்தையும் பல மாதங்கள் மழையின்றி வறண்டும் காணப்படும். இந்த சூழலில் இம்மாடுகள் தாக்குப்பிடிக்கின்றன. ஆந்திராவிலிருந்து ஓங்கோல் பசு, குஜராத்திலிருந்து கிர், காங்க்ரேஜ் பசுக்களும் இங்கு தருவிக்கப்பட்டு இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. இங்குள்ள மாட்டு இனங்களில் 80 சத மாடுகள் ஓங்கோல் என்ற பிரம்மன் சாதியைச் சார்ந்தது. இங்கு ஒவ்வொரு விவசாயிக்கும் 100–1000 ஏக்கர் நிலம் உள்ளதால் தங்கள் நிலங்களிலேயே மேய்க்கின்றனர். சில சமயம் வனத்திலும் மேய்ப்பர். என்னுடைய அப்பா 10,000 நாட்டு மாடுகள் பராமரித்து வந்தார். என்னிடம் 2000 மாடுகள் உள்ளது. எனது 5 வயது மகனும், மாடு பராமரிப்பில் ஈடுபட்டு வருகிறான். மாடு மேய்க்க கழுதையும், குதிரையும் சவாரி செய்ய பராமரித்து வருகிறோம். சில நட்டு இனங்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டு 100 ஆண்டுகள் ஆகின்றன. தற்சமயம் இந்தியாவை விட எங்கள் நாட்டில் இந்திய நாட்டினங்களான கிர், ஓங்கோல், காங்கிரஜ், பசுக்களும் முர்ரா, ஜாபர்பாடி எருமை இனங்களிலும் அதிகளவிலும் அதே சமயம் இவைகளின் பால் உற்பத்தி திறனும் அதிகரித்துள்ளன. 1910 ஹோல்ஸ்டைன் என்ற ஐரோப்பா கண்ட இனத்தின் பால் உற்பத்தி திறன் 1320 (வருடத்திற்கு) ஆக இருந்தது. தற்சமயம் 10,000 கிலோவை எட்டி விட்டது. இதே போல் பிரேசில் நாட்டில் இந்திய இனங்களின் (திமில் உள்ள பசுக்களின்) பால் உற்பத்தி திறன் 2000–3000 கிலோவாக இருந்தது. தற்சமயம் 10,000 கிலோவாக கூடி விட்டது. இதற்கு நல்ல தரமான மாடுகளை கண்டறிந்து இனப்பெருக்கம் செய்ததானலே என்றால் மிகையாகாது. காட்டிலிருந்த மாட்டினை முதன் முதலில் வீட்டு பிராணியாக 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பில் நடந்தது. இது யுரோ (Uro) அல்லது அரோக்ஸ் (Aurochs) என அழைக்கப்பட்டது. (Bos primigenius) இதிலிருந்து ஆசியப்பசு பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தேர்வு செய்யப்பட்டு (Bos primigenus namandicus) (Indians) என்ற இரகம் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த ஐரோப்பா இனத்திலிருந்துதான் ஆப்பிரிக்கா நாட்டு பசுக்களும் உருவாகியிருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். பொதுவாக திமில் உள்ள மாடுகள் இரத்தம் உறிஞ்சும் ஒட்டுண்ணிகளின் தாக்குதலுக்கு தாக்குப்பிடித்ததாகவும் இதனால் ஆப்பிரிக்காவில் திமில் உள்ள மாடுகள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு நிலைத்து பாதுகாக்கப்படுகிறது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 14 பிப்ரவரி 2015 அன்று நடைபெற்ற உலகலாவிய கால்நடை இன பாதுகாப்பு கருத்தரங்கில் கூறப்பட்டது.

Jose Otavio Lemos
Technical Adviser, ABCZ - Brazilian Association of Zebu Breeders , Brazil

திருச்சூர் இந்திராவின் இயந்திர வேளாண்மை

கேரளா மாநிலம் திருச்சூர் மாவட்ட கொடகரா குன்னத்தரா ஊரில் வசிக்கும் இந்திரா (54) கடந்த 20 வருடங்களாக இயற்கை விவசாயம் செய்து வருகிறார். இவர் பி.டெக் முடித்துவிட்டு ஒரு தனியார் கம்பெனியில்

டெல்லியில் வேலை பார்த்து வந்தார். பின்னர் சொந்த ஊருக்கு வந்து விவசாயம் செய்ய ஆரம்பித்தார். இவருக்கு சொந்தமாக 10 சென்ட் நிலம் தான் உள்ளது. தன்னுடைய உழைப்பினால் 65 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து நெல் பயிர் சாகுபடி செய்து வருகிறார். குத்தகைப்பணமாக வருடத்திற்கு ஏக்கருக்கு ரூ. 6000 கொடுக்கிறார். இவர் இயற்கை வேளாண்மை முறைகளை அனுசரித்து வருகிறார். இவர் டிராக்டர், டில்லர், டிரான்ஸ்பிளாண்டர், ஸ்பிரேயர், அறுவடை இயந்திரம் அனைத்தையும் வாடகைக்கு எடுத்துவந்து பயன்படுத்துகிறார். டிராக்டருக்கு 1 நாளைக்கு ரூ.1800 வரை வாடகைப்பணம் தருகிறார் (4 மணிக்கு) பவர் டில்லருக்கு ரூ. 1800 ம், ஸ்பிரேயருக்கு ரூ.250 ம் நாள் வாடகைப்

பணமாகக் கொடுக்கிறார். இவர் 65 பாரம்பரிய நெல் ரகங்கள் பாதுகாத்து வருகிறார். இவரிடமுள்ள முக்கிய இரகங்கள் குறுவா, தவளக்கண்ணன், சிட்டேரி, பூங்காரு, இவர் ஆடிப்பட்டத்தில் விதைத்து கார்த்திகையில் அறுவடை செய்கிறார்.

நெல் நடவும் இயற்கை வேளாண்மையும் :

நெல் விதைத்து 9நாட்களில் நடவு இயந்திரம் மூலம் நடவு செய்கிறார். ஒரு குத்தில் 2–3 நாற்றுக்கள் நடப்படும். நட்ட 15 நாளில் ஜீவாமிருதம் உரக்கரைசல் தெளிக்கிறார். நட்ட 30 நாட்களில் பஞ்சவ்யா தெளிக்கிறார். அடியுரமாக கனஜீவாமிருதம் இடுகிறார். நட்ட 10 நாட்கள் கழித்து நெல் வயலின் நாற்புரமும் 50 மி.லி வீதம் முந்திரி எண்ணெய் ஏக்கருக்கு 200 மி.லி கலந்து ஊற்றி விடுகிறார். இந்த எண்ணெய் நீரில் கலந்து சில நாட்கள் தேக்கப்படுவதால் பூச்சிகள் வரது எனக் கூறுகிறார். நட்ட 2 மாதம் கழித்து காந்தாரிமிளகாய் எனப்படும் சிறுமிளகாய் (காரம் அதிகம்) 50 கிராமும், வெள்ளைப்பூண்டு 50 கிராமும் அரைத்து 1 லிட்டர் கோமியத்தில் கலக்க வேண்டும். இதனுடன் 10 லிட்டர் நீர் சேர்த்து வயலில் தெளித்தால் இலை வெட்டும் வெட்டுக் கிளிகள் தொல்லை குறையும் நெல்நட்ட 40–45 நாட்களில் மீன் அமினோக அமிலம் (மீன் கழிவை பாத்திரத்தில் எடுத்து வெல்லம் கலந்து ஊற வைத்தது) 5 மி.லி. எடுத்து 1 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதனை 15 நாள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும். பூ வெடுக்க 10 நாட்கள் முன்னும், பூ வெடுத்த 10 நாட்கள் பின்பும் புளித்த மோர் கரைசல் 1 லி மோரை 10 லிட்டர் நீரில் கலந்து) தெளிக்க வேண்டும். நெல் வயலின் நாற்புறமும் நட்ட 10 வது நாளில் மீனை எடுத்து வந்து ஒரு பிளாஸ்டிக் பாட்டிலில் போட்டு வைத்தால் இதிலிருந்து வரும் நெடியவாசனை பூச்சிகளை விரட்டும் தன்மை கொண்டது. இவர் ஏக்கருக்கு 15 மூடை (1500 கிலோ) அறுவடை செய்கிறார். சாகுபடி செலவு ரூ. 10,000 ஆகிறது. நிகர வருமானம் ரூ. 12,000 கிடைக்கிறது. இவர் நெல்லை பாலக்காட்டு இரப்பர் மில்லில் அரைத்து கிலோ ரூ.65 க்கு விற்பனை செய்கிறார்.

P. Indira
Thiravium , Vengasseri Marathu , Kunnathara,
Kodagara - 680 684,
Thirusur District ,
Kerala ,
Cell : 9496246519

பெருமாள்பட்டி கோவிந்தராஜின் கால்நடை மூலிகை வைத்தியம்

மதுரை மாவட்டம் , உசிலம்பட்டி வட்டம், டி.பெருமாள்பட்டி எனும் கிராமத்தில் திரு. ரா. கோவிந்தராஜ் (56) வசித்து வருகிறார். இவர் 10 ஆம் வகுப்பு வரை படித்து விட்டு 30 வருடமாக தென்னக இரயில்வேயில் எலக்ட்ரிக் வெல்டராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். இவருக்கு சொந்தமாக 3 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் வாழை தென்னை, மற்றும் காய்கறிகளும் 1/2 ஏக்கர் அளவில் சோற்றுக்கற்றாழையும் வளர்த்து வருகிறார். இவர் வாரத்திற்குகொருமுறை சோற்றுக் கற்றாழையை தனது கால்நடைகளுக்கு கொடுத்து வருகிறார். இவருக்கு சொந்தமாக 2 கறவை பசுமாடும், 25 வெள்ளாடுகளும், 10 நாட்டு கோழிகளை பராமரித்து வருகிறார். இவர் தனது சிறு வயது முதலே தனது அப்பா ராமசாமியிடம் மூலிகை வைத்திய அனுபவ முறையைத் தெரிந்து வைத்துள்ளார். இவரது கால்நடை மூலிகை வைத்திய அனுபவ முறைகள் பின்வருமாறு:

மாடு கழிச்சலுக்கு

வீலி இலை 2 கைப்பிடி இதனுடன் 200 மி.லி மோர் சேர்த்து அரைத்து காலை மாலை இரண்டு வேலைக்கு 20 மி.லி வீதம் கொடுக்க வேண்டும்.

மாடு உடல் சூடு தனிய

சோற்றுக்கற்றாழை 2 இதழ் இதனுடன் 100 கிராம் வெந்தயம் சேர்த்து அரைத்து வாரத்திற் கொருமுறை கால்நடைகளுக்கு கொடுத்து வந்தாலே உடல் சூடு தணியும் மற்றும் எந்த வித தொற்று நோயும் வராது.

ஆறாத புண்ணுக்கு

தேவையான பொருட்கள் : கொழுஞ்சி இலை – 2 கைப்பிடி, சுண்ணாம்பு 10 கிராம், மாட்டு நெய் 50 கிராம்.

செய்முறை : மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பசைபோல் செய்து புண் உள்ள இடத்தில் 2 நாள் தடவி வந்தால் புண் ஆறிவிடும்.

மாடு மாசி போடாமலிருந்தால்

தேவையான பொருட்கள் : சின்ன வெங்காயம் – 300 கிராம், சுடு தண்ணீர் – 200 மி.லி , நாட்டு வாழைப்பழம் – 10 எண்ணம்.

செய்முறை : மேற்க்கண்ட அனைத்தையும் சேர்த்து அரைத்து உருண்டை செய்து மாட்டிற்கு 2 வேலை கொடுத்தாலே போதும் 1/2 மணி நேரத்தில் மாசி விழுந்து விடும்.

மாட்டில் பாலின் அளவைக் கூட்ட

தேவையான பொருட்கள் : சுரைக்காய் – 1/2 கிலோ, பாசிப்பயறு – 200 கிராம் , பச்சரிசி சாதம் – 200 கிராம், தேங்காய் – 1 எண்ணம் , வெல்லம் – 1/2 கிலோ, தட்டப்பயிறு – 200 கிராம். செய்முறை : மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டிற்கு 200 மி.லி வீதம் 2 நேரமாக ஒரு வாரத்திற்கு கொடுத்தால் மாட்டில் பாலின் அளவு 2 லிட்டராக இருந்தது 3 லிட்டராக அளவு கூடும்.

மாடு கழிச்சலுக்கு

தேவையானவை : பழம்பாசி இலை – 2 கைப்பிடி, வெந்தயம் – 50 கிராம், மோர் – 100 மி.லி . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து 300 மி.லி வீதம் 2 வேலைக்கு கொடுத்தால் கழிச்சல் குணமாகும்.

ஆர். கோவிந்தராஜ்
த/பெ. ராமசாமி
டி. பெருமாள்பட்டி ,தும்மக்குண்டு அஞ்சல்
உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம் – 625529
செல் : 9944484294

சுந்தர மூர்த்தியின் கால்நடை வைத்யம்

பாண்டிச்சேரி , வாழப்பட்டான்பாளையம் கிராமத்தில் திரு. சுந்தரமூர்த்தி (78) வசித்து வருகிறார். இவர் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவர் கடந்த 30 வருட காலமாக கால்நடை மற்றும் மனிதர்களுக்கும் மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். ஐந்து அல்லது பத்து கிராம் ஈஸ்வரமூலிகை கருடங்கிழங்கு அதே அளவு மிளகு 30 கிராம் அல்லது 50 கிராம் இவை காலையில் எல்லாவற்றையும் அரைத்து உருண்டையாக்கி உள்ளுக்குள் போடவும். இந்த மருந்தை மாட்டுக்கு, வயது , உடலை பொருத்து கூட்டி குறைத்தே கொடுக்கலாம். ஒரு நாளைக்கு காலையில் மட்டும் கொடுக்கவும். மருந்து கொடுத்த ஒரு மணி நேரம் கழித்து அரிசி கஞ்சி வைக்கவும். ஒரு நாள் அல்லது மூன்று நாள் கொடுக்கவும். மாட்டுக்கு வந்த நோய் , விஷக்கடி தீரும். இளங்கன்றுகுட்டி கழிந்தால் வசம்பு சுட்ட கரியை தேனில் குழைத்து நாக்கில் தடவவும். பாம்புகடி அதிக விஷம் உள்ளதாய் இருந்தால் 10 கிராம் ஈஸ்வர மூலிகை, கருடன்கிழங்கு 10 கிராம், மிளகு 50 கிராம் அல்லது 30 கிராம் அரைத்து போடவும். இரண்டு வேளை காலை , மாலை போடவும். ஈஸ்வர மூலிகை தழையை போடுவதாய் இருந்தால் ஒரு வேளைக்கு 30 கிராம் அரைத்து மற்ற பொருள்களுடன் கலந்து போடவும் . இது பாம்பு கடிக்கு மட்டும் மேலே சொல்லியது எல்லா நோய்கும் உபயோகப்படுத்தலாம்.

சு. சுந்தரமூர்த்தி
த/பெ. சுப்பராய கவுண்டர்
வாழப்பட்டான் பாளையம்
வில்லியனூர் அஞ்சல்
பாண்டிச்சேரி – 605 110

கச்சைகட்டி குழந்தையின் மடி நோய் வைத்தியம்

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா கச்சைகட்டி எனும் கிராமத்தில் திரு. குழந்தை (47) வசித்து வருகிறார். இவர் 3 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர். இவர் 2 கறவை மாடுகளும் 30 வெள்ளாடுகளும் பராமரித்து வருகிறார். பால் தரும் பசு மாடுகளுக்கு வரும் மடி நோய்க்கு மூலிகை வைத்தியம் செய்து குணப்படுத்தி வருகிறார்.

உருளைக் கிழங்கு – 1/2 கிலோ எடுத்து பச்சையாக துண்டு துண்டாக நறுக்கி உள்ளே கொடுக்கவும். எலுமிச்சம்பழ – 2 எண்ணம் சாறு எடுத்து டால்டா – 100 கிராமுடன் பிசைந்து மடி மீது தடவ வேண்டும்.

சீமைகருவேலை ஒழிக்க நடவடிக்கை

மாதம் மும்மாரி மழை பொழிய வேண்டுமா தண்ணீர் பஞ்சம் இல்லாமல் இருக்க வேண்டுமா நிலத்தடி நீர்மட்டம் பெருக வேண்டுமா; தண்ணீருக்காக அண்டை மாநிலங்களை கையேந்தாமல் இருக்க வேண்டுமா ; விளைநிலங்கள் தண்ணீர் கஷ்டம் இல்லாமல் இருக்க வேண்டுமா ; இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டுமா; புவிவெப்ப மயத்தை குறைக்க வேண்டுமா; சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டுமா ; இவை அனைத்தும் வேண்டுமெனில் ஒன்றே ஒன்றுமட்டும்செய்யவேண்டும்அதுஎன்ன ? சீமைக்கருவேல மரங்களை வேரோடு அழிக்க வேண்டும்.

நம் நாட்டின் வளத்தை அழித்து கொண்டிருக்கும் சீமைக்காரனைப் போன்ற சீமைக்கருவேல மரங்களை அழித்து நம் இந்தியாவை வளமான சுகாதாரமான தூய்மையான இந்தியாவாக மாற்றுவோம் என்று ஒவ்வொரு இந்தியனும் உறுதி கொள்ள வேண்டும்.

சீமைக்கருவேல மரத்தினால் ஏற்படும் விளைவுகள்

சீமைக்கருவேல மரங்கள் வளர்ந்து இன்று இயற்கை வளத்தை கெடுத்துக் கொண்டிருக்கின்றன. சீமைக்கருவேல மரத்தின் வேர்கள் 175 அடி ஆழம் வரை செல்கிறது. சீமைக்கருவேல மரம் ஒரு அடி உயரம் வளர்வதற்கு 1000 லிட்டர் தண்ணீர் எடுத்துக் கொள்கிறது. மற்ற மரங்கள் சுமார் 50 முதல் 100 லிட்டர் தண்ணீர் எடுத்துக் கொள்கிறது. சீமைக்கருவேல மரம் ஒரு வருடத்திற்கு 10000 விதைகள் உற்பத்தி செய்து பரப்புகிறது. சீமைக்கருவேல மரத்தின் உயரம் சுமார் 40 அடியும். சுற்றளவு. 4 அடியுமாகும். சீமைக்கருவேல மரம் ஒரு மாதத்தில் சுமார் 20 முதல் 30 கிலோ வரை வளரும் சீமைக்கருவேல மரத்தை சுற்றி எந்த தாவரங்களும் வளர்வது கடினம். சீமைக்கருவேல மரம் மண்ணை மலடாக்குகிறது. அதன் வேரில் இருந்து வரும் ஒரு வகை நச்சுப் பொருள் மற்ற மரங்களை அருகில் வளர விடாமல் தடுக்கிறது. சீமைக்கருவேல மரம் நிலத்தடி நீரை அதிகம் உறிஞ்சுகின்றது. அதனால் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்து விட்டது. சிமைக்கருவேல மரங்களை அழிக்க கேரள அரசு ஆணை பிறப்பித்தது. இன்று கேரள மாநிலம் எங்கு பார்த்தாலும் பச்சை பசேலென்று இயற்கை அழகாக தோற்றமளிக்கிறது.இயற்கைவளத்தின் முக்கியத்துவமான மழை பொய்த்து போனதற்கு முதல் காரணமே சீமைக்கருவேல மரம். சீமைக்கருவேல மரத்தில் இருந்து வரும் நச்சுக்காற்றை கர்ப்பிணிப் பெண்கள் சுவாசிப்பதால் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தையை பாதிக்கிறது. சீமைக்கருவேல மரத்தில் இருந்து வரும் மூச்சுக்காற்று காற்றில் கலந்து ஈரப்பதத்தை குறைக்கிறது. சீமைக்கருவேல மரத்தில் இருந்து விழும் காய்ந்த பழம் என்ற காயை மாடுகள் உண்பதால் நோய் உண்டாகிறது. சீமைக்கருவேல மரங்களில் இருந்து வரும் நச்சுக்காற்று ஆண்களுக்கு ஆண்மை குறைபாட்டை உண்டாக்குகிறது. சீமைக்கருவேல மரங்களை எரிப்பதால் அதிலிருந்து ஏற்படும் புகை மக்களுக்கு புற்றுநோயை அதாவது ''14 சிகரெட்'' பிடித்ததற்கான பலனை கொடுக்கிறது. மக்களுக்கு நுரையீரலை பாதித்து நுரையீரலை கருப்பாக்குகிறது.

சீமைக்கருவேலை அழிக்க என்ன செய்வது ?

இவற்றை வேரோடு பிடுங்க வேண்டும். மரத்தை வெட்டி விட்டு. வேர் பகுதியில் நாட்டுச் சர்க்கரையை துணியில் வைத்து அப்பகுதியை எரிக்கவும். இவற்றை அழிக்க மக்களாகிய நாம் செய்ய வேண்டியவை: ஒவ்வொரு பொது சேவை அமைப்புகளும் ஒரு கிராமத்தை தத்தெடுத்து இவற்றை அழிக்க வேண்டும். மக்கள் தங்களால் முடிந்த அளவு குறைந்தது ஒரு நாள் சம்பளத்தை அல்லது ஒரு நாள் உழைப்பை இதற்காக செலவிட வேண்டும். கண் சிகிச்சை முகாம், இரத்த தான முகாம், கோயில் உழவாரப் பணியை போல் சீமைக்கருவேல மரங்கள் ஒழிப்பையும் முதல் தொண்டாக செய்ய வேண்டும். கிராமத்தில் உள்ளவர்கள் தினசரி ஒரு மணி நேரம் இவற்றை அழிக்க பாடுபட வேண்டும்.

மாநில, மத்திய அரசுகள் செய்ய வேண்டியது

சீமைக்கருவேல மரத்தை அழிக்க போர்க்கால அடிப்படையில் திட்டம் தீட்ட வேண்டும். அந்தந்த ஊரில் உள்ள வி.ஏ.ஓ. இரண்டு மாநில அல்லது மத்திய அதிகாரிகளின் முன்னிலையில் அழிக்கப்பட வேண்டும். எந்த ஊரில் முழுவதுமாக ஒரு மாதத்திற்குள் அழிக்கப்பட்டதோ, அந்த ஊரில் உள்ள மக்களுக்கு ரேஷன் பொருட்கள் இரண்டு மடங்காக கொடுக்க வேண்டும். எந்த ஊரில் முழுவதுமாக ஒரு மாதத்திற்குள் அழிக்கப்படவில்லையோ, அந்த ஊரில் உள்ள மக்களுக்கு ரேஷன் பொருட்களை தடை செய்ய வேண்டும். இதை அழிப்பதற்கு நன்கொடைகள் அதிகமாக தருவதற்கு குறிப்பிட்ட நாட்கள் (3 நாட்கள்) 80 என்று 75 சதவீதம் வரி விலக்கு தருவதற்கு அரசு அறிவிக்க வேண்டும். புறம் போக்கு இடங்கள், இரயில்வே பாதையில் இரு பக்கம் உள்ளவற்றை அழிக்க அந்தந்த அரசு துறைகள் இதே கால கட்டத்திற்குள் ஏற்பாடு செய்ய வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் அழிக்கும் அதிகாரிகளுக்கு ஊக்கத் தொகை கொடுக்க வேண்டும். ''சீமைக்கருவேல மரங்களை வேரோடு ஒழிப்போம்'' வளம் தரும் மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்'' என்று செயல்படுவோம்.

ஏ. ஜானகிராமன் ,81, அம்மன் சன்னதி தெரு
மதுரை – 625 001 ,செல் – 9150009998

அய்யாத்துரை கோனாரின் மூலிகை வைத்தியம்

அய்யாத்துரை கோனார் மதுரை மாவட்டம் பேரையூரைச் சார்ந்த டி. கிருஷ்ணாபுரத்தில் வசித்து வருகிறார். இவரது வயது 90 . இவருக்கு 20 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் கிணற்றுப்பாசனம் கொண்டு விவசாயம் செய்து வருகிறார். நெல் , கடலை, மக்காசோளம், வெங்காயம் , மிளகாய், கம்பு, சோளம், முருங்கை போன்றவை இவரது நிலத்தில் பயிர் செய்யப்படுகின்றன. இவரது தோட்டம் மூலிக்கொட்டம் எனும் மலையருகில் அமைந்துள்ளது. தோட்டத்தில் 50திற்கும் அதிகமான தென்னை மரங்கள், உள்ளன. இவருக்கு திருமணமான இரண்டு ஆண் மகன்களும் இரண்டு பெண் மகள்களும் உள்ளனர். அய்யாத்துரை கோனாரது மகன்கள் தற்பொழுது தோட்டத்தை பராமரித்து வருகின்றனர். தொன்னூறு வயதான இவர் பல மூலிகை வைத்தியங்கள் தெரிந்து வல்லமை பெற்றுள்ளார். முக்கியமாக கால்நடைகளுக்கு வைத்தியம் பார்ப்பதில் சிறந்தவராக திகழ்ந்து வருகிறார். மருந்திற்கு தேவையான செடிகளை மலையில் பறித்து தானாகவே தயார் செய்து மாடுகளுக்கு கொடுத்து வருகிறார். இவ்வைத்திய முறைகளை அவரது தாத்தாவிடம் கற்றுக் கொண்டுள்ளார். தற்பொழுது இவரது மகனான வரதராஜ பெருமாள் (53) மற்றும் பேத்தியான ஜமுனா இவ்வைத்திய முறைகளை கையாண்டு பின்பற்றி வருகின்றனர். இவரிடம் 50 தொழுமாடுகளும் 50 வெள்ளாடுகளும் உள்ளன. கால்நடைகளுக்கு இவரது வைத்தியக் குறிப்புகள் பின்வருமாறு.

விஷகடிக்கு

சிறியா நங்கை இலையை அரைத்து காலை மாலை இருவேளையும் ஆடு மாடுகளுக்கு உள் மருந்தாகக் கொடுக்கலாம்.

சூட்டு நோய்க்கு (புண், பொக்களம்)

250 கிராம் வெங்காயம், சீரகம் 50 கிராம், வெந்தயம் 25 கிராம், மஞ்சள் பொடி 50 கிராம், எண்ணெய் 100 கிராம், தலைசுருளி இலை, சிறியா நங்கை இலை , தும்பை இலை, துளசி, குப்பை மேனி இலை, பாலா இலை எடுத்து உரலில் ஆட்டி சாற்றை எடுக்கவும். ஆட்டுக்கு 250 மி.லி சாறு போதும்.

மடிநோய்க்கு

எலுமிச்சைபழம், ராமக்கட்டியை கலந்து மடுவில் தடவினால் மடி நோய் சரியாகி விடும்.

ஆட்டுக்கு கால் ஒடிந்தால்

புளியங்கொட்டையை நன்றாக அரைத்து கொதிக்க வைத்து எடுத்து உடைந்த இடத்தில் தடவி வர சரியாகி விடும். (அல்லது) மூங்கந்தப்பையை உடைந்து காலில் வைத்து துணியைச் சுற்றி கட்ட வேண்டும். தொடர்ந்து ஒரு வாரத்தில் நல்லெண்ணெயை அதில் ஊற்றி வர சரியாகி விடும்.

குதிரை வலிப்பு நோய்க்கு

ஆடு மாடுகள் நடுங்கிக் கொண்டிருந்தால் தகர இலையை அரைத்து மோரில் கலந்து உள் மருந்தாகக் கொடுக்கலாம்.

காலில் நீர்க்கட்டு வந்து நொண்டினால்

முடநாரி இலையை அரைத்து பச்சை தண்ணீரில் கலந்து கொடுக்கனும். ஊறல் தண்ணீர் விடக் கூடாது . கடலைச் செடியை இரையாகக் கொடுக்க கூடாது.

கொண்டைப்பிடி

கொம்பில் கயிற்றை போட்டு ஒரு மரக்கிளை வழியாக கயிறை செலுத்த வேண்டும். மாடு காலை தூக்கும் போது உலக்கையை கொண்டு கயிற்றை அடிக்க வேண்டும். கொண்டைப்பிடி சரியாகி விடும்.

கண்ணில் வெள்ளை போக

பீர்க்க இலை , சீரகம், மிளகு, இவற்றை கசக்கி கண்ணில் சொட்டு விட வேண்டும்.

வயிறு ஊதினால்

பெரியா நங்கை இலையை அரைத்து உள் மருந்தாக கொடுக்க சரியாகி விடும்.

மாட்டு சாணத்தில் இரத்தமாக வந்தால்

யானை நெரிஞ்சி இலையை புளிச்ச தண்ணீரில் 5 நிமிடம் ஊற வைத்து தண்ணீரை மாட்டிற்கு கொடுக்க வேண்டும்.

மாட்டுக்கு விஷகடிக்கு

கொல்லங்கோவை இலை, கருப்பட்டி மற்றும் மிளகு சேர்த்து கொடுக்க வேண்டும்.

எருக்கட்டி இலைகள் நோய்க்கு (மலச்சிக்கலுக்கு)

ஆமணக்கு மற்றும் கருப்பட்டியை அரைத்து உருண்டை செய்து உள்மருந்தாகக் கொடுக்கலாம்.

அனைத்து நோய்களுக்கும் முறிவாக சங்க இலையைப் பயன்படுத்தலாம்.

வி. அய்யத்துரை கோனார்
த/பெ. வீரப்ப கோனார்,
2/340 , தெற்குத்தெரு
டி. கிருஷ்ணாபுரம்
பேரையூர் தாலுகா
மதுரை மாவட்டம்

லூயிஸ் மலாஸிஸ் விருது 2015
(Louis Malassis International Prize)

(அட்டைபட கண்டுபிடிப்புக்கு விருது)

அக்ரோபோலிஸ் என்ற பிரான்சு நாட்டு அறக்கட்டளை ஒவ்வொரு வருடமும் வேளாண்மையில் பணியாற்றும் சிறந்த 3 விஞ்ஞானிகளுக்கு பரிசு வழங்கி கௌரவிக்கின்றது. 2015 ம் ஆண்டிற்கு கஜுசி சடியோ என்ற ஜப்பானியர் இளம் விஞ்ஞானி பிரிவில் பரிசு பெற்றுள்ளார். இவர் ஆப்பிரிக்க மேட்டு நிலங்களுக்கு மேம்படுத்தப்பட்ட இந்திய நெல் ரகங்கள் மூலம் 70 சதவீதம் விளைச்சலைக் கூட்டியுள்ளார். ஜெயாகான் என்ற விஞ்ஞானி பன்னாட்டு பூச்சி சூழியில் நிறுவன (International centre of Insect Physiology and Ecology) பணியாளர். கென்யா, உகாண்டா, டான்சானியா, எதியோப்பியா நாடுகளில் 96000 விவசாயிகள் மக்காச்சோளப்பயிரைத் தாக்கும் தண்டு துளைப்பான் பூச்சியினாலும் , சுடுமல்லி என்ற ஒட்டுச் செடியாலும் வருடந்தோறும் 14 கோடி போய் இழப்புக்கு உள்ளாகின்றனர். இதற்குத் தீர்வாக மக்காச் சோளம் பயிரிடப்படும் நிலத்தைச் சுற்றி நேப்பியர் தீவனப்புல் 2 வரிசையும் மக்காச்சோளப்பயிர்களுக்கு இடை வரிசையில் டெஸ்மோடியம் என்ற பயறு வகை தாவரத்தையும் (டெஸ்மோடியம் என்ற பயறு வகை தாவரம் தீவனமாகவும் உரச்செடியாகவும் பயன்படுத்தலாம்). விதைத்து பூச்சி தாக்குதலைக் குறைத்துள்ளார்.

பயிரிடும் முறை விளக்கம்

நேப்பியர் தீவனப்பயிருக்கு தண்டு துளைப்பான் தாய் பூச்சி கவரப்படும். டெஸ்மோடியம் பயிர் தண்டு துளைப்பானை விரட்டும். டெஸ்மோடியம் பயிரிலிருந்து வெளிவரும் இரசாயன பொருட்கள் தண்டு துளைப்பான் தாய் பூச்சியை விரட்டும். அதே சமயம் நேப்பியர் தீவன பயிரிலிருந்து வெளிவரும் வாசனை தண்டு துளைப்பான் தாய் பூச்சியை கவர்ந்து இழுக்கும். இதனால் மக்காச்சோளப்பயிரில் தண்டு துளைப்பான் தாய் பூச்சிகள் முட்டையிடாது. இதன் காரணமாக மக்காச்சோளைப்பயிர் தண்டு துளைப்பான் தாக்குதலுக்கு உட்படுவதில்லை. இது தவிர கால்நடைகளுக்கு தேவையான சத்தான தீவனப்பயிரும் விவசாயிகளுக்கு கிடைக்கிறது.

Pascal Kosuthi
Director Agropolis Foundation
France
foundation@agropolis.fr

ஆட்டுத் தீவனமாக செங்கிழுவைத் தழை

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், உ. வாடிப்பட்டி கிராமத்தில் திரு.ராமசாமி (50) வசித்து வருகிறார். இவருக்குச் சொந்தமாக 4 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் முருங்கை , சோளம் மற்றும் காய் கறிகள் பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் 20 வெள்ளாடுகள் , 10 நாட்டுக் கோழிகள், பால் மாடு (புலிக்குளம் இனம்) பராமரித்து வருகிறார். இவர் வெள்ளாட்டிற்கு செங்கிழுவை மரத்தை வெட்டி தனது வீட்டிற்கு அருகாமையில் (ஆட்டு படலாக) நட்டு அதிலிருந்து கிடைக்கும் தழைகளை பறித்து வெள்ளாடுகளுக்கு ஒரு

வேளை 1 கிலோ வீதம் தீவனமாகக் கொடுத்து வருகிறார். 10 வருடங்களுக்கு முன்னர் இந்த செங்கிழுவை மரத் தழையை ஊரில் வெள்ளாடு

வைத்திருந்தவர்கள் அனைவரும் பயன்படுத்தினர். ஆனால் தற்போது வனத்துறையினர் தங்களை வனத்திற்குள் அனுமதிக்காததால் தீவனத் தழை பெரும்பாலும் கிடைப்பதில்லை என ராமசாமி கூறுகிறார்.

எம். ராமசாமி
தெற்குத் தெரு . உ. வாடிப்பட்டி
உத்தப்பநாயக்கனூர் (அஞ்சல்)
உசிலம்பட்டி (தாலுகா)
மதுரை (மாவட்டம்), செல் : 9597352720

ஓடைப்பட்டி பொன்னுச்சாமியின் மூலிகை வைத்தியம்

திண்டுக்கல் மாவட்டம் , ஒட்டன்சத்திரம் தாலுகா, ஓடைப்பட்டி எனும் கிராமத்தில் திருமதி. செல்லாத்தாள் வசித்து வருகிறார். இவருக்குச் சொந்தமாக 5 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் புகையிலை, தக்காளி, பயிரிட்டுள்ளார். இவருக்குச் சொந்தமாக 12 வெள்ளாடுகள் மற்றும் கருஞ்சதைக் கோழி 6 பராமரித்து வருகிறார். இவர் பின்பற்றி வரும் கால்நடை மூலிகை வைத்தியம் முறை பின்வருமாறு.

ஆட்டுக்கு வயிறு உப்பிசம்

அரிசி, சோளம் தின்று வயிறு உப்பலுக்கு பெருங்காயத்தை அரைத்து பவுடர் 20–50 கிராம் அளவு நீரில் கலந்து உள்ளே கொடுக்க வேண்டும்.

பொன்னுச்சாமி, ஓடைப்பட்டி ,ஒட்டன்சத்திரம் தாலுகா
திண்டுக்கல் மாவட்டம் , செல் : 7402558668

முனியாண்டியின் கால்நடை வைத்தியம்

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் தாலுகா, மாவில்பட்டி கிராமத்தில் திரு. முனியாண்டி (70) வசித்து வருகிறார். இவர் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 9 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் உளுந்து, தட்டைப்பயறு, சோளம், அகத்தி போன்றவை பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவருக்குச் சொந்தமாக 14 வெள்ளாடுகள், 2 கறவை மாடுகள் , 15 நாட்டுக் கோழிகள் பராமரித்து வருகிறார். இவரது கால்நடை மூலிகை வைத்தியம் பின்வருமாறு.

ஆடு இளங்கொடி போடாமலிருந்தால்

தேவையான பொருட்கள் : வீலி இலை – 2 கைப்பிடி, எள் – 1 கைப்பிடி கருப்பட்டி – 50 கிராம்.

செய்முறை: மேற்க்கண்ட அனைத்தையும் சேர்த்து அரைத்து 100 மி.லி அளவு எடுத்து ஆட்டிற்கு கொடுக்கவும் .

செம்மறி ஆடு மக்காச்சோளம் தின்று வயிறு ஊதியிருந்தால்

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் தாலுகா மாவில்பட்டி கிராமத்தில் திரு. சுப்பையா சொந்தமாக 55 வெம்பூர் இன செம்மறி ஆடு பராமரித்து வருகிறார். இவரது மூலிகை வைத்திய அனுபவம் பின்வருமாறு.

தேவையான பொருட்கள் : தேங்காய் எண்ணெய் – 100 மி.லி , வெல்லம் – 30 கிராம் , சோடா உப்பு – 10 கிராம் , பச்ச தண்ணீர் – 100 மி.லி .

செய்முறை : மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து ஆட்டிற்கு 100 மி.லி வீதம் 2 வேளை கொடுக்க வேண்டும்.

மாற்றுத்திறனாளிகள் கைத்தறி நெசவு செய்யும் உத்தி

ஈரோடு மாவட்டம், புஞ்சை புளியம்பட்டியைச் சேர்ந்த பவித்ரா, சத்தியமங்கலத்தில் உள்ள எஸ்.ஆர்.சி. மெமோரியல் மெட்ரிக் பள்ளியில் 9 ம் வகுப்பு படித்து வருகிறார். பவித்ரா மாணவ பருவத்திலேயே பல கண்டுபிடிப்புகளை தனது பெற்றோர்களுடன் சேர்ந்து உருவாக்கியுள்ளார். கைத்தறி நெசவில் தற்போது நடைமுறையில் கால் ஊனமுற்றோர்களும், கால்வலி உள்ளவர்களும், வயது மூத்தோர்களும் நெசவு செய்ய இயலாத நிலையில் உள்ளனர். இவர்களுக்கான நெசவு முறை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது நெசவு செய்யும் முறை

வலது காலினை வைத்து பெடல் ஐ கீழ்நோக்கி அழுத்த வேண்டும். அழுத்தும் போது shed open ஆகும். வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் சட்டில் (shuttle) நூலை இயக்குவார்கள். இடது கையினால் ரீடு கோம் (Reed comb) ஐ முன்புறமாக இயக்குவார்கள். பின்னர் பின் பக்கமாக நகர்ந்த்துவார்கள் . ஒரு weft insert ஆகி beat ஆகி துணியாக மாறும். இடது காலினை வைத்து பெடலை ஐ கிழ்நோக்கி அழுத்த வேண்டும். அழுத்தும் போது shed open ஆகும். இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் shuttle நூலை இயக்குவார்கள். இடது கையினால் Reed comb ஐ முன்புறமாக இயக்கி பின்னர் பின்பக்கமாக நகர்ந்த்துவார்கள். மீண்டும் ஒரு weft insert ஆகி beat ஆகி துணியாக மாறும். தொடர்ந்து மாறி மாறி செய்தால் துணி உற்பத்தி ஆகும்.

புது மாற்றத்திற்குப் பின்னர் நெசவு செய்யும் முறை

மோட்டர் சுவிட்ச்ஆன் செய்தவுடன் மோட்டார் 45 டிகிரியில் சுற்றி நின்றுவிடும். அப்போது shed open ஆகும். வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் shuttle நூலை இயக்குவார்கள். இடது கையினால் reed comb ஐ முன்புறமாக இயக்குவார்கள். இப்போது cloth sensor sense செய்து மோட்டாரை ஐ reset செய்யும். பின்பக்கம் நகர்த்துவார்கள். இப்போது shed sensor sense செய்து மோட்டார் ஐ anticlock wise 90 டிகிரிக்கு சுழற்சி செய்யும் மோட்டார் இயக்கத்தை நிறுத்திக் கொள்ளும். இப்போது shed open ஆகும். இடது பக்கத்திலிருந்து வலது பக்கம் shelttle நூலை இயக்குவார்கள். மீண்டும் reed comb ஐ முன்புறமாக இயக்குவார்கள். இப்போது cloth sensor sense செய்து மோட்டார் ஐ reset செய்யும். இவ்வாறு தொடர்ச்சியாக இயக்குவதால் துணி உற்பத்தி தொடர்ந்து நடைபெறும். இந்த முறையில் கைத்தறி நெசவு செய்வதால் கால்கள் இல்லாதவர்களும், கால் வலி உள்ளவர்களும் பயன் அடைவார்கள். கைத்தறியில் உள்ள காலால் இயக்கும் pedal லை அகற்றிவிட்டு, அதற்கு பதிலாக rope ஐ மோட்டாருடன் இணைக்க வேண்டும். இந்த மோட்டார் 45 டிகிரி இடப்பக்கமாகவும், வலப்பக்கமாகவும் சுற்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இடப்பக்கமிருந்து வலப்பக்கம் சுற்றியதும் ஒரு சைக்கிள் முடிந்துவிட்டது என்பதை உணர்த்த வேண்டி 2 சென்சார்களை beat beam ன் முன்பக்கம், பின்பக்கமும் இணைக்க வேண்டும். இந்த சென்சாரிலிருந்து சிக்னலை மோட்டாருக்கு அனுப்பும் வகையில் வடிவமைக்க வேண்டும்.

ஆர். பவித்ரா
த/பெ. ராஜசுரேந்திரன்
1/31, 2 நாவலர் தெரு ,புஞ்சை புளியம்பட்டி
ஈரோடு– 638459, செல் : 9944022377

இயற்கை பண்டங்கள் விற்பனைக்கு

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயற்கை வேளாண்மை செய்யும் விவசாயிகள் கூட்டாக சேர்ந்து புதுக்கோட்டை மாவட்ட இயற்கை வேளாண்மை பண்டங்கள் தயாரிப்பாளர்கள் கம்பெனி ஆரம்பித்துள்ளனர். இவர்களிடம் இயற்கையில் விளைந்த அரிசி, அவுல், சிறுதானியங்கள் விற்பனைக்கு கிடைக்கின்றன.

ஆ.ஆதப்பன்,21, செல்வநகர், சிப்பாட் (அஞ்சல்)
புதுக்கோட்டை – 622 002, செல் – 9842093143

சின்ன மலைக்குன்று சென்ன கேசவனின் இயற்கை வேளாண்மை உத்திகள்

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் தாலுகா, சின்னமலைக்குன்று எனும் கிராமத்தில் திரு. சென்ன கேசவன் (69) வசித்து வருகிறார். இவர் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 2 பெண் பிள்ளைகள் மற்றும் 1 ஆண் மகனும் உள்ளனர். இவருக்குச் சொந்தமாக 58 ஏக்கர் நிலம் உள்ளது, இதில் முருங்கை, தென்னை , வாழை மக்காச் சோளம் போன்ற பயிர்களை பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் தற்பொழுது 21 வெள்ளாடுகள் (கொடி ஆடு) இனத்தைப் பராமரித்துள்ளார். இவரது தோட்டத்திற்கு வேலியாக முழுவதும் சூபாபுல்லை நட்டுள்ளார். இதனால் பார்த்தீனியம் எனும் நஞ்சு செடி வளராது. அது போக ஆடுகளுக்கு தீவனமாகவும் உதவுகிறது என்று கூறுகிறார். இவர் தனது 10 ம் வகுப்பு முடித்த பின்னர் தனது தந்தையுடன் முழுமையாக விவசாயத்தில் இறங்கியுள்ளார். இவர் கடந்த 40 வருட காலமாக விவசாயத்தில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார். இவரது இயற்கை வேளாண்மை யுக்திகள் பின்வருவன

மூலிகை பூச்சி விரட்டி (எல்லா பயிர்களுக்கும்)

தேவையான பொருட்கள் : இஞ்சி – 1 கிலோ , பூண்டு – 1 கிலோ , பச்சை மிளகாய் – 1 கிலோ , பெருங்காயம் – 150 கிராம். மேற்கண்ட அனைத்தும் சேர்த்து மாட்டுக் கோமியம் 5 லிட்டரில் கலந்து 48 மணி நேரம் ஊற வைக்கவும். பின்னர் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிருக்கு தெளிக்கலாம். இதைத் தெளிப்பதால் நன்மை செய்யும் பூச்சியினங்கள் சாகாது. இக்கரைசலை 3 மாதம் வரை வைத்துக் கொள்ளலாம். இக்கரைசலை தெளித்த 2 வது மாதத்தில் கீழ்க்கண்ட முறையை கையாள வேண்டும். புங்க எண்ணெய் – 30 மி.லி , இலுப்ப எண்ணெய் – 30 மி.லி , வேப்பெண்ணெய் – 30 மி.லி, ஒட்டும் திரவம் (ஏபிஎஸ்ஏ) – 10 மி.லி மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து 10 லிட்டரில் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இயற்கை உரமாக கோழியின் கழிவு

கோழியின் கழிவை நன்றாக உலர வைத்து பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சும் போது இந்த கழிவை சுமார் ஓர் அங்குலம் உயரம் வரை நிலத்தில படுமாறு வைக்கலாம். இதனால் இதில் உள்ள அம்மோனியா பயிர்களுக்கு நல்ல ஊட்டமாகவும் வளர்ச்சி ஊக்கியாகவும் செயல்படுகிறது என்று கூறுகிறார். இக்கழிவை எல்லாப் பயிர்களுக்கும் இயற்கை உரமாகப் பயன்படுத்தலாம். கத்தரிச் செடிக்கு 100 சதவீதம் பயனைத் தருகிறது .

மரக்கன்று நட குழி துளையிடும் கருவி

கருவியின் பாகங்கள் : பெட்ரோல் டேங்க் – 2 லிட்டர் கொள்ளளவு , கேண்டில் – 1 திருகு வளைவு – 3 கருவியின் கூர்மை முனை – 4 அங்குலம் .

கருவி செயல்படும் விதம்

இக்கருவியானது எல்லா வகையான மரக்கன்றுகளை நடுவதற்கான குழி துளையிட பயன்படுகிறது. இதனை இயக்க 2 பேர் தேவைப்படுகிறது. ஒருவர் தூக்கி செல்லவும் ஒருவர் துளையிடவும் பயன்படுத்தப்படுகிறது. துளையானது 5 அடிக்கு ஒரு குழி போட வேண்டும். அதாவது நிலத்தை கிழக்கு மேற்காக கலப்பையை கொண்டு நேராக ஒரு உழவு ஒட்டவும் பின்னர் தெற்கு வடக்காக ஒரு உழவு நேராக ஒட்டும் போது இரு உழவும் சந்திக்கும் இடத்தில் குழி போட வேண்டும். அப்பொழுது தான் உழவு போட்ட பின் செடியை பாதுகாப்பாக வைக்க உதவுகிறது.

கருவியில் செய்யப்படும் மாற்றங்கள்

இக்கருவியானது மொத்தமாக 24 கிலோ எடை அதிகமாக உள்ளதால் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்ல முடியவில்லை. இதனை 5–6 கிலோவாக மாற்றம் செய்யப்பட உள்ளது. இதனால் பெண்களும் கருவியை இயக்கலாம். கருவியின் உயரம் 4 அடியாக உள்ளது. 31/2 அடியாக குறைக்கப்பட உள்ளது. பெட்ரோல் டேங்க் நீக்கம் செய்யப்பட்டு கையால் இயக்கப்பட உள்ளது. இதனால் 1 நாளைக்கு 2 லிட்டர் பெட்ரோல் மீதமாகிறது. தற்போதுள்ள கருவியின் விலை ரூ. 5000 ஆகிறது. இதனை ரூ. 500க்கு குறைத்து கருவியை மேம்பாடு செய்யப்பட உள்ளது. இக்கருவியைக் கொண்டு ஒரு நாளைக்கு 1 நபர் வேலை செய்தால் உலர்ந்த நிலத்தில் சுமார் 150 குழிகள் போடலாம். ஈரமான நிலமாக இருந்தால் 300 குழிகள் வரை போடலாம். 1 குழி போடுவதற்கு ரூ. 75 பைசா கணக்கு வீதம் கூலியாட்களுக்கு கொடுக்கிறார். புதிதாக செய்த கருவியின் விலை ரூ. 600 ஆகும்.

கால்சியம் சத்து பெற (மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும்)

தேவையான பொருட்கள் : முருங்கை இலை பவுடர் – 300 கிராம் , சீரகம் – 50 கிராம் , மிளகு – 50 கிராம் . மேற்கண்ட அனைத்தும் சேர்த்து வெண்ணீரில் கலந்து தினமும் காலையில் 100 மி.லி அளவு சாப்பிட்டால் எலும்பு பலம் பெறும் மற்றும் உடல் வளர்ச்சி ஏற்படும்.

இதனை கால்நடைகளுக்கு மாட்டிற்கு 300 மி.லி அளவும், ஆட்டிற்கு 50 மி.லி அளவும் கொடுக்கலாம்.

கொம்பு சிலிகா உரம்

பசுமைப்புரட்சி, பூச்சிக்கொல்லிகள் மற்றும் ரசாயன உரத்தால் விவசாயத்திற்கு நன்மை தரக்கூடிய பூச்சிகளை ஏராளமாக அழித்துவிட்டோம். உரங்களில் மகத்தானது கொம்பு சிலிக்கான் உரம். ஒரு ஏக்கருக்கு 10 கிராம் மட்டும் போதுமானது. இதனை 10 லிட்டர் நீருக்கு 1 கிராம் வீதம் கலந்து பயிருக்கு மேலே தெளிக்க வேண்டும். (இந்த உரம் தயாரிக்க வெங்குச்சான் கல்தூளுடன் நீர் கலந்து பசு மாட்டு கொம்பில் நிரப்பி நிலத்தில் புதைத்து மக்க வைக்க வேண்டும்).

இரண்டாவது கொம்பு சாணி உரம். இது ஒரு ஏக்கருக்கு 40 கிராம் மட்டும் போதுமானது. உலகில் சுமார் 40,000 பூச்சியினங்கள் 1974 ம் ஆண்டுக்கு முன்பு வரை இருந்து வந்தது. ஆனால் நாம் பசுமைப் புரட்சி என்னும் பெயரால் பூச்சிக் கொல்லிகள் மற்றும் ரசாயன உரம் மூலம் பயிர் செய்து எண்ணற்ற பூச்சியினங்களை அழித்து விட்டோம்.

விவசாயத்திற்கு 180 பூச்சியினங்கள் மட்டுமே தீங்கு செய்பவை, மற்ற அனைத்தும் நன்மை செய்பவையே . ஒரு கோப்பை மண்ணில் 20 மில்லியன் புரோட்டோசோவாவும் 8 மில்லியன் பாக்டீரியாவும் உள்ளன. செம்மரம் 1 லட்சம் ரேடியோ அலைகளை தடுக்க உதவுகிறது. இந்த மரம் 15 ஆண்டுகளில் வளரும்.

நிலத்திற்கு உரம் தேவையில்லை, நிலத்தை உழுத 30 வது நாள் 3 லிட்டர் இளநீருடன், 20 லிட்டர் தண்ணீர் கலந்து 1 ஏக்கர் நிலத்திற்கு தெளித்தால் பயிர்களுக்கு வளர்ச்சி ஊக்கியாக செயல்படுகிறது.

திரு. சென்னகேசவன்
சின்னமலைகுன்று அஞ்சல்
எட்டையாபுரம் தாலுகா
தூத்துக்குடி மாவட்டம் – 628902
செல் – 9842348915

தனபதியின் சவுக்கு மரம் வளர்ப்பு உத்திகள்

சவுக்கு மரம் தமிழ்நாட்டில் 1930 ல் வெள்ளைக்காரரால் ஆஸ்திரேலியாவிலிருந்து தருவிக்கப்பட்டு நடப்பட்டது. இந்த சவுக்கு கன்றுகள் முதன்முதலில் ஓடை, கால்வாய்களின் இருபுறங்களிலும் நடப்பட்டன. திரு. தனபதியின் தாத்தா இதன் வளர்ச்சியைப் பார்த்து சவுக்கு மரத்திலிருந்து விதை எடுத்து தனது



தோட்டத்தில் நடவு செய்தார். தற்சமயம் 3 தலை முறைகளாக தனபதியின் குடும்பத்தினரால் 70 ஏக்கரில் சவுக்கு மரம் நடப்பட்டு பராமரிக்கப்படுகிறது. சவுக்கு மரம் மானாவரி, நீர்பாசனம் உள்ள இடங்கள், (உப்புத்தண்ணீர் பாசனம் கூட ஏற்றுக்கொள்ளும்) போன்ற எல்லா நிலங்களிலும் வளர்க்கலாம்.

திரு. தனபதி (65) எஸ்.எஸ்.எல்.சி வரை படித்து விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார். தன்னுடைய இளம்வயதிலேயே தந்தையுடன் சேர்ந்து விவசாய பணிகளை தீவிரமாக கவனித்து வந்துள்ளார். இப்பகுதியில் முதன் முதலில் கரும்பு சாகுபடி செய்து வெல்லம் உற்பத்தி செய்தது தனபதி குடும்பம் தான். இந்த வெல்லத்தை லண்டன் வரை ஏற்றுமதி செய்துள்ளார்கள். நீர் பற்றாக்குறையினால் கரும்பு விவசாயித்திலிருந்து விடு பட்டு மரப்பயிர் சாகுபடிக்கு மாறி உள்ளனர். தற்சமயம் சவுக்கு 70 ஏக்கரிலும் , தென்னை 5 ஏக்கரிலும், மா 10 ஏக்கரிலும் , மூங்கில் 2 ஏக்கரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. இது தவிர தேக்கு, குமில், வேம்பு, செம்மரம், புங்கன், பணை மரங்கள் சேர்த்து 2500 காணப்படுகின்றன. இவருடைய பண்ணையில் 7 கிணறுகள் உள்ளன. இருப்பினும் நீர் பற்றாக்குறையினால் சவுக்கு மரம் நீர்பாசனத்திலும் மற்றும் மானாவரியிலும் பயிரிடப்படுகிறது. சவுக்கு மர உத்திகள் பின்வருமாறு:

சவுக்கு மர நாற்று உற்பத்தி

சவுக்கு மர கன்றுகள் விதைகள் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. விதைகள் லேசாக இறக்கை போன்று இருப்பதால் மணலுடன் கலந்து மேட்டு பாத்தியில் விதைத்து வந்தார். 45 நாட்கள் கழித்து வளர்ந்த பின் கன்றுகளை வேருடன் பிடுங்கி பாலித்தீன் பைகளில் அல்லது நிளத்தில் நடவு செய்தார். கன்றுகளை பாத்தியிலிருந்து பிடுங்கும் சமயம் வேர்கள் அருந்து விடும். இதைத் தவிர்க்க கீழ்கண்ட முறைகளை கடைபிடிக்கிறார்.

20 அடி நீளம் , 6 அடி அகலம், 1/2 அடி ஆழம் உள்ள குழி வெட்டி அதில் சுமார் 200 பனை மட்டைகளை (பச்சை மட்டை) பனை மட்டையின் காம்பு வெளியே தெரியும்மாறு பதிக்க வேண்டும். மட்டை மேல் செம்மண், மக்கிய எரு, தென்னை நார்க்கழிவு, மணல் சமபங்கு சேர்த்து இட வேண்டும். இதில் சவுக்கு மர விதைகளை பரப்ப வேண்டும். பின்னர் பூ வாலியால் நீர் ஊற்ற வேண்டும். முளைத்த பின் பஞ்சகவ்யா 15 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். 45 நாட்கள் கழித்து கன்றுகளை பிடுங்கி நடவு செய்யலாம். கன்றுகளை பிடுங்க பனை ஓலை மட்டையை காம்பு கொண்டு தூக்கினால் கன்றுகள் தானாக வெளி வரும். இதனால் வேர்களுக்கு சேதாரம் உண்டாகாது. பின்னர் பாலித்தீன் பைகளில் இக்கன்றுகளை நடவு செய்து 2–3 மாதங்கள் வரை வைத்திருக்கலாம். இந்த முறையை வனத்துறை அலுவலர்களும் பார்வையிட்டு கடைபிடித்து வருகின்றனர்.

விதைகளை சேகரிக்கும் முறை

விவசாயிகள் பொதுவாக முதிர்ந்த காய்களை (வெடிப்பதற்கு முன்பு) சேகரித்து இதிலிருந்து விதைகளை பிரித்து எடுப்பார்கள்.

தனபதி சவுக்கு மர காய்களை சேகரித்து ஒரு சேலையை விரித்து (10x3அடி) அதில் பரப்பி விடுவார். இதன் மேல் மற்றொரு சேலையை விரிக்க வேண்டும். பின்னர் 2 சேலைகளையும் ஒரு கிளிப்பால் இணைத்து விட வேண்டும். இதை அப்படியே விட்டு விட வேண்டும். இம்முறையில் காய்கள் வெடிக்கும் சமயம் விதைகள் வெளியே சிதராமல் இருக்கும். பின்னர் விதைகளை பத்திரமாக சேகரித்து கொள்ளாலம். இதனால் விதைகள் காற்றினால் பறந்து விடுவதை தடுக்கலாம். நேரமும் மிச்சமாகும்.

விதை மரங்களை தேர்வு செய்தல்

இவருடைய அனுபவத்தில் வரப்புகளில் காணப்படும் சவுக்கு மரங்களில் நன்கு திடகாத்திரமாக வளர்ந்த மரங்களை அடையாளம் பார்த்து இதில் நன்கு காய் பிடித்த மரங்களை தேர்வு செய்கிறார். வரப்பு ஓரத்தில் உள்ள மரங்கள் ஈரப்பதத்தினாலும், உரத்தினாலும் நல்ல வளர்ச்சியுடன் கூடி இருக்கும் என்று கூறுகிறார். பின்னர் இதிலிருந்து விதைகளை எடுத்து தானே கன்று உற்பத்தி செய்கிறார். சில சமயங்களில் தனியாரிடம் கொடுத்து நர்சரி போட செய்து விநியோகம் செய்து வருகிறார். இவரிடம் வாங்கி நடவு செய்யப்பட்ட கன்றுகள் நல்ல வளர்ச்சியுடன், நல்ல கனத்துடன் இருப்பதால் வியாபாரிகளிடம் நல்ல விலையும் கிடைக்கிறது. என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

இதுவரை 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் சவுக்கு மரக்கன்றுகள் இவரிடமிருந்து தருவித்து 2000 ஏக்கரில் நட்டுள்ளார். வறட்சியில் மானாவாரி காலப் பயிர்கள் பட்டாலும் சவுக்கு மரம் படாது. ஓர் ஏக்கரில் 4 வருடங்களில் ரூ. 4 லட்சம் பணம் எடுக்கலாம். அதாவது வருடத்திற்கு நிகர வருமானம் ஏக்கருக்கு ஒரு லட்சம் என்று கூறுகிறார்.

வருமானம்

தனபதி தனது தோட்டத்தில் மூங்கில், தேக்கு, செம்மரம், தேக்கு, குமிழாமரம், தென்னை, நெல், காய்கறி பயிர்கள் சாகுபடி செய்வதால் சவுக்கு மரம் வளர்ப்பு எங்ஙனம் லாபகரமாகவுள்ளது என்பதை ஒப்பிட முடிகிறது. இவர் 43 அடி இடைவெளியில் சவுக்கு கன்றுகளை நடவு செய்வதால் இந்த இடைவெளியில் மாடுகள், செம்மறி ஆடு மேய்க்க பயன்படுத்துகிறார். ஒரு விவசாயி 10 ஏக்கர் சவுக்கு நட்டால் இதில் 10 மாடுகள் அல்லது 100 செம்மறி ஆடு பராமரிக்க முடியும் என கூறுகிறார். நடவு செலவு, உழவு, குழிஎடுத்தல், களைஎடுத்தல், நீர்பாசனம் போன்றவற்றிற்கு 4 வருடங்களில் ரூ. 1 லட்சம் செலவாகும். 3 வருடங்களில் நீர்பாசனம் செய்யப்படும் சவுக்கு தோப்பிலிருந்து ஏக்கருக்கு 50 டன்கள் அல்லது 5 ஆண்டுகளில் மானாவாரி பூமியில் 30 டன்கள் கிடைக்கும். சவுக்கு மர டிம்பர் டன்னுக்கு ரூ. 6200 க்கு (நல்ல டிம்பர் ரூ. 9000 க்கும் கழிவு டிம்பர் ரூ. 5000 க்கும்) விற்பனை செய்யலாம். 2 ஏக்கர் நெல் சாகுபடி செய்யும் நீரைக் கொண்டு 5 ஏக்கர் சவுக்கு சாகுபடி செய்ய முடியும். தனபதியின் சவுக்கு சாகுபடி உத்திகளைப் பாராட்டி தமிழ்நாடு வனத்துறை அமைச்சரால் 12.3.2015 ம் தேதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஜி.எஸ். தனபதி , 1377 கம்பன்நகர்
புதுக்கோட்டை – 622003 , செல் : 9443593339

ராஜேஸ்வரியின் சிறுதானியம் மற்றும் சத்துமாவு குடிசைதொழில்

தஞ்சாவூர் மாவட்டம் திருவையாற்றில் திருமதி. ராஜேஸ்வரி (50) வசித்து வருகிறார். இவர் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 2 மகள்கள் உள்ளனர். இவர் கடந்த 12 வருடங்களாக குடிசை தொழிலாக தனது வீட்டிலேயே நவதானியங்கள் சிறுதானியங்கள் கொண்டு சத்துணவு மாவு தயாரித்து வந்தார். முதலில் பக்கத்து வீட்டுகாரர்களுக்கு கொடுத்து வந்தார்.

தற்சமயம் தமிழ் நாட்டில் பல ஊர்களுக்கும் விநியோகித்து வருகிறார். இதில் 5 பெண்கள் வேலை செய்து வருகின்றனர். இந்த தொழிலிருந்து மாதம் ரூ. 25,000 வரை வருமானம் எடுக்கிறார். இவர் 8.2.2015 ம் தேதி புதுடெல்லியில் இராஷ்ட்ரபதி பவனில் சிருஷ்டி சன்மான் விருது பெற்றுள்ளார். இவரது சிறுதானிய உணவு தயாரிப்பு முறைகள் பின்வருமாறு:

ஆரோக்கிய கஞ்சி மாவு (Sugar Diet) **:** சோயா , காராமணி , பார்லி, உளுந்து, வெந்தயம், ஓட்ஸ் தலா 1 கிலோ, கம்பு, கேழ்வரகு, மக்காச்சோளம் , தினை தலா 2 கிலோ, கொள்ளு 4 கிலோ, பாதாம் 100 கிராம் மேற்கண்ட அனைத்துப் பொருட்களை அரைத்து மாவாக்க வேண்டும். இதனை ஒரு தேக்கரண்டி எடுத்து ஒரு டம்ளர் நீரில் கலந்து 10 நிமிடம் அடுப்பில் வைத்து தேவையான அளவு உப்பு சேர்த்து அருந்தலாம். சர்க்கரை நோய் இல்லாதவர்கள் தேவையான அளவு இனிப்பு சேர்த்துக் கொள்ளலாம் .

உடல் எடையை குறைக்க

சோயா மாவு, பார்லி மாவு, தினைமாவு, கொள்ளு மாவு , ஓட்ஸ் மாவு கலந்தது .

நீரிழிவு நோயை குணப்படுத்த

வரகு அரிசி – 1 கிலோ, வெந்தயம்– 250 கிராம் மாவு கலந்தது.

வரகு ராகி தோசை மாவு

வரகுமாவு, கோதுமை மாவு , ரவைமாவு, மிளகு, சீரகம் கறிவேப்பிலை கலந்தது.

தாய் மார்களுக்கு கஞ்சி மாவு

சம்பா கோதுமை, சோயா, காராமணி, உளுந்து, பாச் பயறு , வெந்தயம், கம்பு, கேழ்வரகு, சோளம், வரகு, பாதாம் 50 கிராம், முந்திரி – 50 கிராம், தினை, கொள்ளு மாவு கலந்தது.

இட்லி மாவு

இதில் கொள்ளு மாவு, உளுந்து, கடலை பருப்பு, மிளகாய், கறிவேப்பிலை, பெருங்காயம், அடங்கியுள்ளன.

ஆரோக்கிய சாதப்பொடி

துவரம் பருப்பு, பயத்தம் பருப்பு, கொள்ளு, வறு கடலை, மிளகு, சீரகம், மிளகாய், மல்லி, கறிவேப்பிலை, பெருங்காயம், உப்பு அடங்கியுள்ளன.

உடல் புத்துணர்ச்சி பெற

சுக்கு, மிளகு, சீரகம், ஓமம், ஏலக்காய், பனை வெல்லம் மற்றும் வெல்லம் சேர்த்து காய்ச்சி குடிக்கலாம்.

தினை மாவு கஞ்சி

50 கிராம் தினை மாவை தண்ணீரில் கரைத்து கஞ்சியாக கொதிக்கவிட்டு வெல்லம் பால் சேர்த்து அருந்தலாம்.

தினை மாவு களி

50 கிராம் தினை மாவை தண்ணீரில் கரைத்து அடுப்பில் வைத்து கிளறி கூழ் பதம் வந்ததும் நெய் சேர்த்து களி செய்யலாம். 250 கிராம் தினை மாவுடன் 250 கிராம் சர்க்கரை மிக்ஸியால் அரைத்து கலக்கவும் இதனுடன் 100 மி.லி நெய்யை சூடாக்கி இந்த மாவுடன் பிசைந்து உருட்டினால் தினை லட்டு செய்யலாம். சிறு தானிய உணவுகளை சாப்பிடுவதால் கிடைக்கும் பயன்கள்: நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது. இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்துகின்றது. தேவையற்ற கொழுப்புகளைக் கரைக்கின்றது. இரத்த அழுத்தத்தைக் குறைக்கிறது. மலச்சிக்கலை குணப்படுத்துகின்றது. வயிற்றுப்புண்ணை ஆற்றுகின்றது. இரத்தத்தில் சிவப்பணுக்கள் அதிகரிக்கச் செய்கின்றது. இதய நோய்களை தருக்கின்றது. பெண்களுக்கான கர்ப்பப்பை பிரச்சினைகளைத் தீர்க்கின்றது. செரிமான சக்தியை அதிகரிக்கின்றது. தாய்ப்பாலை அதிகரிக்கின்றது.

திருமதி. ராஜேஸ்வரி ரவிக்குமார்
115, வடக்குத் தெரு,
திருவையாறு– 613204
போன் – 04362 – 260308
செல் : 9443163206

சுபாஸ்ரீயின் மாடி மூலிகைத் தோட்டம்

சுபாஸ்ரீ (42) இயற்பியல் முதுநிலை பட்டதாரி. இவர் சென்னை மாநகரில் குடியிருந்தாலும் இவருக்கு இயற்கையிலேயே மூலிகைத் தாவரங்கள் மூலிகை வைத்யம், இயற்கை வேளாண்மை, ஆரோக்ய உணவு தயாரிப்பு முறையில் ஈடுபாடுடன் செயல்பட்டு வருகிறார். கடந்த 3 வருடங்களாக தனது வீட்டைச் சுற்றியுள்ள குறுகிய இடத்தில் வீட்டுத்தோட்டமும் மொட்டை மாடியில் மூலிகைச்செடிகள், காய்கறிப் பயிர்களை தொட்டிகளில் பயிரிட்டு மூலிகைச்செடிகள், பராமரித்து வருகிறார். மூலிகைச்செடிகள் விற்பனை, இயற்கைஉரம், ஆரோக்கிய சத்துணவு பொருட்கள் மூலம் மாதம் ரூ. 15,000 வரை வருமானம் ஈட்டுகிறார். இவரது கணவர் சென்னையில் கம்ப்யூட்டர் நிறுவனத்தில் பணிபுரிந்தாலும் சுபாஸ்ரீயுடன் இணைந்து பசுமை வாழ்வியலுக்கு உறுதுணையாக செயல்பட்டு வருகிறார். அட்ரி அரோக்கிய பொருட்கள் (ATRI Health Products) என்ற பெயரில் விற்பனை செய்து வருகிறார். இது தவிர பள்ளிகளில் மூலிகைத்தோட்டம், வீட்டு காய்கறி தோட்டம் அமைக்கவும் ஆலோசணைகள் வழங்கி வருகிறார். மார்ச் மாதம் 14ம் தேதி சென்னையில் ஐ.ஐ.டி. கல்லூரியில் நடைபெற்ற அடித்தள கண்டுபிடிப்பாளர்கள்

கருத்தரங்கில் கலந்து கொண்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். இவருடைய தோட்டத்தில் பராமரிக்கப்பட்டு விநியோகிக்கப்படும் மூலிகைத் தாவரங்கள். ஆடாதொடை, பூனை மீசை, பொன்னாங்கன்னி, கரிசாலை, முடக்கத்தான், தூதுவளை, செம்பருத்தி, வல்லாரை, சிறுகுறிஞ்சான், வசம்பு, சித்தரத்தை, லெமன்கிராஸ், எலும்பொட்டிதழை, ஆரோரூட், சங்குபுஸ்பம், வெற்றிலை, திப்பிலி, கறிவேப்பிலை, பிரண்டை, பூனைக்காலி, தவசிக்கீரை, இன்சுலின்செடி, ஆல்ஸ்பைஸ், விபூதிபச்சிலை.

விற்பனை செய்யப்படும் ஆரோக்ய பொருட்கள்:

அட்ரி ஆரோக்ய மிகஸ் (நவ தானியங்கள், பயறுகள், சேர்ந்தது) மூலிகை முகப்பவுடர், மூலிகைக்குளியல் பவுடர், மூலிகை கூந்தல் எண்ணெய், மூலிகைபூச்சிவிரட்டி, (பீரோ, அலமாரியில் பயன்படுத்தலாம்), விருக்சபலம் (இயற்கை உரம்) விருக்சாமிருதம் (இயற்கை திரவ உரம்) .

சுபாஸ்ரீ
7, திலகர் தெரு
ஏ.ஜி.எஸ். காலணி
ஆழ்வார் திருநகர்
சென்னை – 600087
செல் – 9677101627

நம்மாழ்வாரும் இயற்கை வேளாண்மையும்

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் ''இயற்கை விவசாயம் எனக் கூறக் கூடாது. இயற்கை வழி வேளாண்மை எனக் கூற வேண்டும் என்று மேடைகளில் பேசுவார். ''இயற்கை வழி வேளாண்மை'' என்றால் என்ன? என விவாதிப்போம்.

ஒவ்வொரு பயிரும் தனக்கு தேவையான சத்தை 60 சதவீதம் வேர்கள் மூலம், 40 சதவீதம் இலைகள் வாயிலாகவும் பெற்றுக் கொள்கிறது. எனவே மண்ணில் வேதியியல் பொருட்களை, பூச்சி மருந்துகளை தெளிக்காமல், இயற்கை இடு பொருட்களை மட்டும் இட்டு, இலை வழி ஊட்டக் கரைசல் மற்றும் மூலிகை பூச்சி விரட்டிகளை தெளித்து செயல்படும் ''பயிர் விளைவிக்கும் முறையே'' இயற்கை வழி வேளாண்மை ஆகும். அதிலும் அவர் நீடித்த நிலைத்த விவசாயத்தை போதித்தார். மண்ணில் தேவையான உயிர் உரங்களை இட்டு விவசாயம் செய்து விட்டு, உதாரணமாக மிளகாய் பயிரிட்டால், மீண்டும் மண்ணை உழாமல், அச்செடிகளையே உரமாக்கி, மக்கிப் போகச் செய்து வேறு காய்களைப் பயிரிடுவது, அப்படியே தொடர்ந்து உழாமல் விவசாயம் செய்வது என்று வானகத்தில் விளைவித்துக் காட்டினார். மண்ணை வளப்படுத்துவதும், இலை வழி ஊட்டக் கரைசல் கொடுப்பதும் தான் முக்கியம்.

மண்வளம் பெருக்க, தொழு, கோழி, மண்புழு உரம், ஊட்டமேற்றிய மட்கு உரமிடுதல் மற்றும் பல தானிய விதைப்பு சிறந்த முறையாகும். இந்த ஊட்ட மேற்றிய மட்கு உரம் என்பது தொழு உரம்+ பூஞ்சன சிதைவு (பங்கஸ் கம்போஸ்டிங் கல்சர்) டிரைகோடர்மா விரிடி + பாக்டீரியா சிதைவு + பால் + தயிர் +கோமியம்+ வெல்லக்கரைசல் + தேங்காய் பால் + மோர் கரைசல் + மீன் அமினோ அமிலம் + பஞ்சகவ்யா இவற்றை சேர்த்து உருவாக்கும் மக்கிய உரமாகும். இதனை தயார் செய்து அளவுடன் மண்ணில் இட்டால் நுண்ணுயிர்கள், மண்புழுக்கள் பெருக்கம் அடையும்.

இதே போல் கீழ்கண்ட ஊட்டக் கரைசல்களை இவை வழி ஊட்டமாக நாம் பயிர்களுக்கு தெளித்து வருவதால் பயிர்கள் தனக்குத் தேவையான சத்தினை மண் / இலை வழியாகப் பெற்று நல்ல வளர்ச்சியடைந்து நல்ல விளைச்சலை நமக்குத் தரும். 1. அமிர்தக் கரைசல், 2. தேங்காய் பால் மோர் கரைசல், 3. மீன் அமினோ அமிலம், 4, இயற்கை பூச்சி விரட்டி (உடனடி பூச்சி விரட்டி / மூலிகை பூச்சி விரட்டி) 5. பஞ்சகவ்யா.

இவை ஐந்தும் எவ்வித இரசாயனம் கலக்காமல் மாட்டு சாணம், கோமியம், கருப்பட்டி, தயிர், தேங்காய், மீன்கழிவு, இஞ்சி, மிளகாய், வேப்பஇலை, புங்க / எருக்க இலை பால், வாழைப்பழம், இளநீர், வெல்லம் போன்ற விலை குறைந்த, சாதாரண பொருட்களைக் கொண்டு தயாரிக்கலாம். இடம் / பண வசதி இல்லாதவர்கள் இப்பொருட்கள், வேப்பம் புண்ணாக்கு, மண்புழு உரம் போன்றவற்றை தனியே விலைக்கு வாங்கியும் பயன்படுத்தலாம். இயற்கை வழி வேளாண்மை செய்யும் பொழுது நீர் மேலாண்மையில் கவனமாக இருந்து, தண்ணீர் அளவோடு பாய்ச்ச வேண்டும். சொட்டு நீர் பாசனம் செய்யலாம்.

இயற்கை விஞ்ஞானி கோ. நம்மாழ்வாரை நிறுவனராகக் கொண்டு 2012 ம் ஆண்டு தொடங்கப்பட்டது. என்.ஆர்.எஸ்.எல்.டி. அறக்கட்டளை. மதுரையில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் மதுரை, சென்னை, தென்காசி என பல ஊர்களில் பல இயற்கை வேளாண் சார் பயிற்சிகள், கருத்தரங்குகள், மாடித் தோட்ட பயிற்சிகள், இலவச மரக் கன்று வழங்கும் நிகழ்ச்சிகளை

நடத்தி வருகிறது. மதுரையில் 1200 பேர் இது வரை ''மாடித் தோட்டம், காய்கறி பயிரிடுதல், பழக்கடைத் தோட்ட'' பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். ஐயா அவர்கள் மறைவுக்குப் பின் அவரது பிறந்த நாள் நினைவு நாட்களை மிக சிறப்பாக பயனுள்ள செயல்களைக் கொண்டு கொண்டாடி வருகிறோம். 6.4.2015 அவரது பிறந்த நாளை காந்தி நினைவகம், சர்வோதய இலக்கிய பண்ணை, ஷெப்பர்டு அறக்கட்டளை, மதுரை இலக்கிய மன்ற ஆதரவுடன் ''முப்பெரும் விழாவாக'' கொண்டாடப்பட்டது.

''இலவச மாடி காய்கறித் தோட்ட பயிற்சி, இயற்கை காய்கறிகள் கிலோ ரூ 10 க்கு வழங்கும் விழா, கடம்ப மரக் கன்றுகள் இலவசமாக வழங்குதல்'' ஆகிய மூன்று நிகழ்ச்சிகளும் 6.4.2015 அன்று மதுரை காந்தி நினைவகத்தில் நடைபெற்றது.

என்.ஆர்.எஸ்.எல்.டி அறக்கட்டளை
எண்: 30, 2 வது மாடி,
மேலமாசி வீதி
மதுரை – 625 001
தொலைபேசி : 0452 – 4522424

கீழ் பொம்மராஜபுரம் செல்லத்துரையின் மூலிகை பூச்சி விரட்டி

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தாலுகா கீழ்பொம்மராஜபுரத்தில் திரு. செல்லத்துரை (45) வசித்து வருகிறார். இவர் பள்ளிக் கூடம் படித்தது கிடையாது. இவருக்கு ஒரு ஆண், பெண் பிள்ளைகள் உள்ளனர். இவருக்குச் சொந்தமாக 5 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் ஏலக்காய், பீன்ஸ், தக்காளி மற்றும் எலுமிச்சை பயிர்களை பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் கடந்த வருடம் 2104 ல் ஏலக்காய்க்கு தண்ணீர் பாய்ச்சும் பொழுது களைச் செடியாக இருந்த காட்டு சூரிய காந்தி செடியை பிடுங்கி அரைத்து செடிகளுக்கு அடித்துப் பார்த்ததில் 80 சதவீதம் வெள்ளை அந்து பூச்சிகள், தண்டுதுளைப்பான் போன்ற பூச்சிகள் கட்டுப்படுவதைக் கண்டறிந்தார். நாளடைவில் காட்டுச் சூரிய காந்தியுடன் கீழ்க்கண்ட கலவையை சேர்த்துக் கொண்டார். காட்டு சூரிய காந்தி செடியின் சாறு – 1 லிட்டர், சாணம் – 1 கிலோ, கோமியம் – 1 லிட்டர் மேற்கண்ட அனைத்தும் சேர்த்து ஒரு பிளாஸ்டிக் ட்ரமில் கலக்கி 28 மணி நேரம் ஊற வைக்கவும். பின்னர் இக்கரைசல் 1 லிட்டருடன் 10 லிட்டர் தண்ணீருடன் கலந்து பயிருக்குத் தெளிக்கலாம். இவர் இது வரை 25 விவசாயிகளுக்கு சொல்லிக் கொடுத்துள்ளார். இக்கரைசலை தக்காளி, பருத்தி, வெண்டை, மிளகாய் ஏலக்காய் செடிகளுக்கு தெளிக்கலாம் எனக் கூறினார்.

விஷகடிக்கு

ஆடு, மாடு, மனிதர்களுக்கு : தேவையான பொருட்கள்: பேய்ப்புடலை இலை – 1 கைபிடி, சிறியா நங்கை இலை – 1 கைப்பிடி, பெரியாநங்கை இலை – 1 கைப்பிடி, மிளகாய் வத்தல் – 200 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுக்கவும். இதனை மாடுகளுக்கு 200 மி.லியும் ஆட்டிற்கு 100 மி.லியும் மனிதர்களுக்கு 50 மி.லியும் ஒரு நாளைக்கு 2 வேளை வீதம் கொடுக்கலாம்.

சி. செல்லத்துரை
த/பெ. சீனித்தேவர்
கீழ் பொம்மராஜபுரம் , கோம்பைத்தொழு (அஞ்சல்)
ஆண்டிபட்டி (தாலுகா), தேனி மாவட்டம்
செல் : 8189914265

கச்சைகட்டி சண்முகத்தின் கால்நடை மூலிகை வைத்திய முறைகள்

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா கச்சைகட்டி எனும் கிராமத்தில் திரு. சண்முகம் (57) வசித்து வருகிறார். இவர் 5 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 2 ஆண் மற்றும் 1 பெண் உள்ளனர். இவர் 2 கறவை மாடு 2 வெள்ளாடு மற்றும் 6

கோழிகள் பராமரித்து வருகிறார். இவரது கால்நடை மூலிகை வைத்திய முறைகள் பின்வருவன:

மாடு காய்ச்சலுக்கு

நல்ல வேளை (4 செடி) அரைத்து 2 உருண்டை காலை மாலை கொடுத்து விட்டு சாம்பிராணியுடன் குங்கிலியம் சேர்த்து புகை பிடிக்க வேண்டும்.

ஆறாத புண்ணுக்கு

தென்னங்குறும்பை (உள்பகுதி மிருதுவாக இருக்கும்) 1/2 கிலோ எடுத்து அரைத்து பசைபோல் செய்து புண்ணுக்கு தடவினால் (தொடர்ந்து 4 முறை) புண் ஆறிவிடும்.

மாடு (விழுதி) மாசி (இளங்கொடி) போடமலிருந்தால்

வீலி இலை 1/2 கிலோ எடுத்து அரைத்து உருண்டை செய்து உள்ளே புகட்ட வேண்டும்.

மாடு சினைபிடிக்காமலிருந்தால்

கச்சக்கம்மட்டிக்காய் (பேய்க்குமட்டி) வேர் 1/2 கிலோ, செஞ் சோளத்தட்டை 1/2கிலோ சேர்த்து அரைத்து உருண்டை செய்து காலை மாலை என 2 வேலை போடவும் மறு நாள் காலை கோழிமுட்டை 2 எண்ணம் மஞ்சள் பொடி 20 கிராம் சேர்த்து கொழுந்துவிட்டு மாட்டிற்கு விடலாம்.

சண்முகம்
வடக்குத் தெரு
கச்சைகட்டி அஞ்சல், வாடிப்பட்டி தாலுகா
மதுரை மாவட்டம், செல்: 9965839439

வேளாண்மை கருத்தரங்கம் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் சங்க பொதுக்கூட்டம்

9.5.2015 அன்று தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங் குறிச்சியில் வேளாண்மை கருத்தரங்கமும் அடித்தள கண்டுபிடிப்பாளர்கள் சங்க பொதுக்கூட்டமும் நடைபெற்றது. சித்திரை மாத கடைசி வெள்ளி, சனி நாட்களில் பாரம்பரிய கலைநிகழ்ச்சிகள் வீர பாண்டிய கட்டபொம்மன் பரம்பரை மக்களால் எற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் கண்டுபிடிப்பாளர்கள், விவசாயிகள் 38 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் 4 உறுப்பினர்களுக்கு கடன் உதவி (மொத்தம் ரூ.3,00,000) அளிக்க ஒப்புதல் தரப்பட்டது. ஈராட்சியிலிருந்து வந்திருந்த விவசாயிகள் தங்களுக்கு பசுமாடு பாரம்மரிப்பு செலவு சேவா பயிற்சிக்கு பின் முற்றிலும் குறைந்துள்ளதாக தெரிவித்தனர். திரு.மல்லுச்சாமி தன்னிடம் பாரம்பரிய கே–7 சோளம் (இயற்கையில் விளைவிக்கப்பட்டது) 20 மூடைகள் உள்ளன என்று கூறினார். மேலும் தொடர்புக்கு : எஸ். மல்லுச்சாமி, தூத்துக்குடி, செல் – 9442133686

ராஷ்டிரிய பஞ்சாங்கம் (Rashtriya Panchang)

சூரியன் மேஷராசிக்கு வரும் சமயம் தமிழ் புத்தாண்டு பிறக்கிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சூரியன் மேஷராசிக்கு வரும் நாள் ஏப்ரல் 14 என்று குறிக்கப்பட்டது. இது சூரியன் பூமியில் பூமத்தியரேகையில் நேராக வரும் காலத்தை குறிக்கும். அப்போது பகலும் இரவும் சமமமான காலமாக இருக்கும். தற்சமயம் மார்ச் 22 ம் தேதி இது நடைபெறுகிறது. இச்சமயம் தான் மேஷராசிக்கு வருவதாக துள்ளியமாகக் கணிக்கப்படுகிறது. இதைக்கருத்தில் கொண்டு நமது நாட்டில் 1957 ம் ஆண்டு ராஷ்டிரிய பஞ்சாங்கம் கணிப்பது மத்திய அரசால் கொண்டு வரப்பட்டது. இது கொண்டு வரப்பட்டாலும் பாரம்பரியமாக பஞ்சாங்கம் கணிக்கும் பண்டிதர்கள் பழைய முறையையேப் பின்பற்றி வருகின்றனர். தமிழ்நாடு முன்மாதிரியாக செயல்பட்டு ராஷ்ட்ரிய பஞ்சாங்கத்தை அமுல்படுத்தினால் உகந்ததாக இருக்கும். இதன்படி ஒவ்வொரு தமிழ்மாதம் துவங்கும் ஆங்கிலமாத நாள் குறிப்பிடப்பட்டுள்ளது.

வ.எண்	தமிழ் மாதம்	துவங்கும் ஆங்கில மாத நாள்	மாத நாட்கள்
1.	சித்திரை	22.3.2015	30/31 (லீப் வருடம் 31)
2.	வைகாசி	21.4.2015	31
3.	ஆனி	22.5.2015	31
4.	ஆடி	22.6.2015	31
5.	ஆவணி	23.7.2015	31
6.	புரட்டாசி	23.8.2015	31
7.	ஐப்பசி	23.9.2015	30
8.	கார்த்திகை	23.10.2015	30
9.	மார்கழி	22.11.2015	30
10.	தை	22.12.2015	30
11.	மாசி	21.01.2016	30
12.	பங்குனி	20.02.2016	30

உத்தரயாணம் தொடங்கும் நாள் 22 டிசம்பர். அதாவது ஜனவரி 14 அல்லது. இதுவே மகரசங்கராந்தி நாள். இதுவே தை முதல் நாள் என்று வைத்து கொள்ள வேண்டும்.

குறிப்பு : ராஷ்ட்ரிய பஞ்சாங்கம் (தமிழிலும் கிடைக்கும்) விலை ரூ. 225 / – பெற அனுக வேண்டிய முகவரி:

India meteorological Department Mausam Bhavan, Lodi Road, New Delhi- 110003

வாசகர் வட்டம்

கடமையை ஆற்றும் பேராசிரியர்

சேவா மூலம் எனக்கு சிருஷ்டி சம்மான் விருதுக்கு பரிந்துரை செய்து அனுப்பட்டது. இதன்படி 2006 ல் அஹமதாபாத்திலுள்ள சிருஷ்டி நிறுவனம் எனக்கு இந்த விருதை வழங்கி கௌரவித்தது. அஹமதாபாத்திலிருந்து துவாரகா சென்று அங்கு பகவான் கிருஷ்ணர் வாழ்ந்து வந்த அரண்மனைப் பகுதிகளைப்பார்த்து வந்தேன். பின்னர் அஹமதாபாத்தில் தங்கியிருந்த சமயம் சிருஷ்டி நிறுவன தலைவரும் இந்திய மேலாண்மை நிறுவனத்தில் பணிபுரியும் பேராசிரியருமான அனில் குப்தாவைப் பார்க்க அவரது வீட்டிற்கு சென்ற சமயம் அவர் வெளியூருக்கு போய் விட்டதாகக் கூறி விட்டார்கள். அனில்குப்தாவை பார்க்க முடியவில்லையே என்ற எண்ணத்தில் தூங்கி விட்டேன். கனவில் ஸ்ரீ கிருஷ்ணர் தோன்றி ''என்னை துவாரகாவில் வந்த பார்த்து விட்டு வந்து விட்டாயே இனி மேல் அனில் குப்தாவை பார்த்தால் என்ன பார்க்கா விட்டால் என்ன ? நான் வேறு அவன் வேறா?'' தானே அனில் குப்தா என்பது போல் பேசினார். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் சேவா தொண்டு நிறுவனர் விவேகானந்தனிடம் இதைப்பற்றி கூறினேன். அனில்குப்தா சிறந்த அறிவாளி, அயராது உழைப்பவர்,பிறருக்கு உதவும் குணம் கொண்டவர். இவர் நித்தமும் இரவு தூங்க 2 மணி ஆகிவிடும். இளைஞர்களிடையே உற்சாகமாகப் பேசி தன்னார்வ பணிகளில் ஈடுபடுத்தி பாரம்பரிய அறிவை அடித்தளமாக வைத்து புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்க முனைப்புடன் செயல்படுபவர் என்று கூறினார். அவர் ஒரு கரும்யோகி என்பதால் தான் ஸ்ரீ கிருஷ்ணர் ''நான் வேறு அவன் வேறா'' என்று கூறியதன் உண்மையைப் புரிந்து கொண்டேன் . கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் கூறியதைப்போல் எங்கெல்லாம் செல்வம் , புகழ், அறிவு, வீரம், திறமை வெளிப்படுகிறதோ அது தன்னுடைய அம்சம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

கே.தவுடம்மாள், காக்கிவாடன்பட்டி
சிவகாசி வழி, விருதுநகர் மாவட்டம்

சாத்வீக உணவும் வாழ்க்கையும்

நான் கடந்த 11 வருடங்களாக இறைவாக்கு கூறி வருகிறேன். இதன் படி ஒருவருக்கு சாத்வீக குணம் உண்டாக அசைவ உணவை மட்டுமின்றி சில சைவ உணவையும் தவிர்க்க வேண்டும். இதன்படி சுரைக்காய், காலிபிளவர், தண்ணீர்பழம் (வாட்டர்மெளான்), சோய மொச்சை, சுண்டைக்காய் வத்தல் போன்றவைகளை தவிர்க்க வேண்டும். விரத நாட்களில் எந்த காயையும் அறுவாமனை மூலம் அறுக்காமல் வேக வைத்து கையால் பிசைந்து பயன்படுத்தலாம். உதாரணமாக தக்காளியை கையால் பிசைந்து பயன்படுத்தலாம். வாழைக்காயை அறுக்காமல் வேக வைத்து பின் பிசைந்து புட்டு சாப்பிடுவது போன்று சாப்பிடலாம். விரதம் கடைபிடிப்பவர்கள் விரத நாட்களில் பால், பழம் மட்டும் அருந்தி மறு நாள் விரதம் முடிக்க வேண்டும். பூமித்தாய்க்கு மதிப்பளித்து செருப்பு அணிவதில்லை. உறங்கும் சமயம் மெத்தை, பாய் பயன்படுத்தாமல் தரையில் எளிய விரிப்பு விரித்து தூங்கி வருகிறேன்.

திருமதி. பொன்னுத்தாய், ஆண்டியாபுரம்
சங்கரபாண்டியாபுரம் அஞ்சல்
ஏழாயிரம் பண்ணை வழி, விருதுநகர் மாவட்டம்

இயற்கை முறையில் விளைந்த பண்டங்கள்

செய்ய நான் கடந்த சில வருடங்களாக இயற்கை முறையில் கொய்யா, பாவைக்காய், தக்காளி, தேங்காய், நெல்லிக்காய், மாம்பழம் உற்பத்தி செய்து வருகின்றேன். இவைகளை எங்களிடமிருந்து தருவித்து கொள்ள எங்களை நாடலாம்.

கிஷோர்
135/68, கோபாலகிருஷ்ணன் தெரு
கிருஷ்ணாபுரம், தொன்காசி தாலுகா,
திருநெல்வேலி மாவட்டம், செல் – 9600428811

மந்திர நீர் கொண்டு பயிர் வளர்ச்சி கூட்டுதல்

நான் கேரளாவில் கோழிகோடு விமான நிலையத்தில் பணி புரிந்து வருகிறேன். நான் 20 வருடங்களுக்கு முன்பு இமயமலையில் உள்ள பத்தீரிநாத் கோயிலுக்கு போய் வந்தேன். அப்பொழுது பத்தீரிநாத்திலிருந்து 4 மணி நேரம் நடந்து சென்று வந்தேன். அங்கியிருந்த குகையில் ஒரு யோகி தியானம் செய்து கொண்டிருந்தார். அவருடைய உருவம் மிக பெரியதாக இருந்தது. அவரது தரிசனம் கிடைத்தது எனக்கு மிகவும்

உற்சாகத்தை கொடுத்தது. இது என்னுடைய ஆன்மீக வாழ்க்கைக்கு முன்னேற்றத்தை கொடுத்து வருகிறது. இதன் பின்னர் தண்ணீர் கொண்டு காந்த சக்தியை உண்டாக்கி ஆடு மாடுகளுக்கும், தாவரங்களுக்கும், மனிதர்களுக்கும் கொடுத்து வருகின்றேன். இதனை ஹோமியோபதி மத்திரையில் ஊற வைத்து கொடுத்து வருகிறேன். இதனால் நோயின் தன்மை குறைகிறது. பயிர் வளர்ச்சி கூடுகிறது. பூச்சி நோய்களுக்கு எதிர்ப்பு சக்தி உண்டாகிறது. இம்மருந்துகளை தேவையானோர்களுக்கு இலவசமாக கொடுத்து வருகிறேன்.

கே.கே.சுப்பரமணியன்

காசர்கோடு, கேரளா ,செல்: 9387518778

புற்றுநோய்க்கு மூலிகைசெடி

நான் "முல்லதா" (Annona muricata) என்ற மரக்கன்றை வளர்த்து கன்று ரூ.100க்கு கொடுத்து வருகிறேன். .இம்மரத்தின் இலை, பழங்களை அரைத்து சாப்பிட புற்றுநோய் குணமாகும்.

வின்சென்ட் ,பையம்பள்ளி கவுஸ்வின்சென்ட் ,பையபள்ளிகவுஸ் நண்டடி , பொதவூர் அஞ்சல்நண்டடி , பொதவூர் அஞ்சல்

காசர்கோடு ஜில்லா,

கேரளா – 671313

செல்: 9447855585

பல் சொத்தைக்கு பொடி

படிகாரம் 500 கிராம் (கல் உப்பு) , சோற்றுப்பு 400 , அரைத்து பவுடாரக்கி பாக்கெட் போடவும். அத்துடன் எலுமிச்சம்பழச்சாறு சேர்த்து கொள்ளவும் .

உபயோகிக்கும் முறை : சுண்டல் அளவு எடுத்து வாயில் போட்டு வாயை மூடிக் கொள்ளவும். 5 நிமிடம் கழித்து வாய்கழுவி வெளியே துப்பி விடவும்.

தீரும் நோய்கள் : பல் சொத்தை ஈறு வீக்கம் எலுறில் புண் , பல் அசைவு , நாக்கு புண் , பல் கூச்சம் தீரும். அல்சர் என்ற குடற்புண் மற்றும் (கல்லீரல் மண்ணீரல் புண் குணமாகவும். உடல் இளைத்தவுடன் தேரவும்.

கொழுஞ்சி கசாயம்

5 கொழுஞ்சி வேர் எடுத்து தட்டி நடுவே உள்ள வெள்ளையை தட்டி மேல் உள்ள பட்டையை தட்டி போட்டு 1 லிட்டருக்கு 1/2 லிட்டராக காய்ச்சவும் காலையில் வெறும் வயிற்றில் 200 மி.லி குடிக்கவும். காய்ச்சி கொதிக்கும் போது, சீனி (அல்லது) சர்க்கரை உள்ளே போடவும். அளவு 50 கிராம் பத்தியம் இல்லை. இதனால் இரத்த சுத்தியாகும். இளைத்த உடல் தேரும்.

பொன்னுச்சாமி

ஓடைப்பட்டி ,ஒட்டன்சத்திரம் தாலுகா

திண்டுக்கல் மாவட்டம் , செல் : 7402558668, 8012319435

நெல் விரைவில் அறுவடைக்கு வர

சென்ற ஆண்டு எங்கள் ஊரில் விவசாயிரவி நெல் சாகுபடி செய்திருந்தார். நெல் பயிர் பால் பிடிக்கும் சமயம் கிணற்றில் நீர் பற்றாக்குறையால் நீர் பாசனம் செய்ய முடியவில்லை. இச்சமயத்தில் பஞ்சகவ்யாவை 10 நாள் இடைவெளியில் மூன்று முறை தெளித்தார். நாங்கள் தயார் செய்த பஞ்சகவ்யாவை அவருக்கு கொடுத்தோம். இதனால் நெற்பயிர் காய்ந்து போகமல் விரைவில் மணி பிடித்தது. மணிகள் பெரியதாக இருந்தன. நாங்கள் தயார் செய்த பஞ்கவ்யாவில் பால், தயிர், சாணம், கோமியம், நெய்யிக்கு பதிலாக விளக்கெண்ணெய், பழங்கள் – (மலை நெல்லி , திராட்சை, வாழை, பலா பழங்கள் போன்றவை) சேர்த்திருந்தோம்.

ஏ.பி. அழகர்சாமி

பி.ஏ.வி.எம் ஒட்டு முருங்கை நர்சரி

6/39 , தெற்குத் தெரு, பள்ளபட்டி அஞ்சல்

நிலக்கோட்டை தாலுகா,திண்டுக்கல் மாவட்டம் – 624 233

செல் – 9865345911

பிரமிடு குடிநீர்

கடந்த மூன்று வருடங்களாக பிரமிடு தண்ணீர் அருந்தி வருகிறேன். பிரமிடு தண்ணீர் அருந்துவதால் நீர் சுவையாக உள்ளது. நீரில் கலங்கள் இருக்காது. ஓர் அடி உயரம் உள்ள காட்போடு அட்டையில் தயார் செய்யப்பட்டுள்ள ஓர் அடி உயரமுள்ள பிரமிடுக்குள் சுமார் 11/2 லிட்டர் அளவு தண்ணீர் பிடிக்கும் பிளாஸ்டிக் குவளையில் 24 மணி நேரம் உள்ளே வைத்து பின் வெளியே எடுத்து அருந்தலாம்.

எஸ். வேலுச்சாமி

ஜே. மெட்டூர் வழி ,நிலக்கோட்டை தாலுகா

திண்டுக்கல் மாவட்டம் ,

செல்–9787259142